விலை ரூபா 6.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

ஈழநாடு வார மலர்

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 28 இதழ் 235
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 15 – 10 – 1995

24-ம் திகதி சூரியகிரகணம் இல. அரசுக்கு நெருக்கடி ஏற்படும்

(பெங்களூர்)

இம்மாதம் இருபத்திநாலாம் திகதி நிகழ விருக்கும் பூரண சூரியகிரகணம் இலங்கை உட்பட பல் வேறு நாடுகளிலும் மோசமான விளைவுகளை ஏற்பத்துடும் என்று ''அஸ்ரோலோஜிக்கல் மகசீன்'' தெரிவித்துள்ளது.

இந்த சூரியகிரகணம் இலங்கை நிகழ்வுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

சிறிலங்கா அரசாங்கம் ஒரு கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகும் ஜனாதிபதி சந்திரிகா வன் முறைக்கு இலக்காகக்கூடிய அபாய கட்டத்துக்கு முகங் கொடுக்க நேரிடும். அவர் கவனமாக இருக்க வேண்டும். என்றும் இச் சஞ்சிகை தெரிவித்துள்ளது

இலங்கையில் பிரச்சனைகளை கட்டுப்படுத்த முடியாமல் கலளரங்கள் வெடிக்குமெனவும் அதனால் உயிர் கொலைகள் அதிகரிக்குமெனவும் அச்சஞ்சிகையில் மேலும் தெரிவிக்கப்படவுள்ளது. (எஸ்-தீ-ரி)

"புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரும் வரை யுத்தம் தொடரும்

ராணுவ பேச்சாளர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரும் வரை யுத்தம் தொடருமென இராவப் பேச்சாளர் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்

அவர் தொடர்ந்து கூறுகையில்; விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு இணங்கும் வரை யுத்தம் நடத்துவது தவிர்க்க முடியாதது. ஆனால் எமது நிபந்தனைக்குட்பட்டே விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும். நாம் முன் எந்தவித நிபந்தனையுமின்றி பேச்சுவார்த்தைக்கு இணங்கினோம்.

விடுதலைப் புலிகள் தாமே சமாதான முயற்சியை முறித்துக் கொண்டனர், விடுதலைப்

(8ம் பக்கம் பார்க்க)

சவாரித்தம்பர்

சின்னக்குட்டி: தெரியாமல் கேட்கிறன் திரௌபதைக்கு துகில் உரிந்த போது என்ன சேலை உடுத்தவ! பருத்தி சாறியோ? அல்லது நைலோன் சாறியோ?

சவாரித்தம்பர்; கண்டறியாத ஆராச்சி! இஞ்சமானங் காக்கிற துணிக்கும் தடை, துணியைத் தோய்க்கிற சவுக்காரத்துக்கும் தடை!

—சிரித்திரன் சுந்தர்

இனப்பிரச்னைக்கு யுத்தம் தீர்வாகாது

- கேணல் ரத்வத்த

(கொழும்பு)

''இனப் பிரச்னைக்கு யுத்தம் ஒரு போதும் தீர்வாகாது. ஆனால் விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்கவும், வடக்கு கிழக்குப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும், அரசியற் பேச்சுவார்த்தை ஒன்றின் மூலம் தீர்வைக் காணவுமே நாம் யுத்தம் செய்கின்றோமென பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத்த தேசிய பாதுகாப்பு நிதி திரட்டும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

(8ம் பக்கம் பார்க்க)

பேச்சுக்கள் மூலம் பிரச்னையை தீர்ப்பதற்கு

அரசுக்கு அழுத்தம் கொடுக்க

ஐ. நா. சபைக்கு வேண்டுகோள்

- யாழ். பிரசைகள் குழு மகஜர் -

(யாழ்ப்பாணம்)

போரை நிறுத்தி பொருளாதார தடைகளை நீக்கி சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு சிறிலங்கா அரசு மீது அழுத்தம் கொடுக்குமாறு யாழ்.பிரஜைகள்குழு ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இம்மாதம் 5-ம் திகதி ஐ. நா. சபைக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரிலே யாழ். பிரஜைகள்குழு மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளது.

சிறிலங்கா அரசின் ராணுவ தாக்குதல் நடவடிக்கைகளால் யாழ்ப்பாணப் பொதுமக்கள் தாங்கொணாத் துன்பத்தை அனுபவித்து வருவதாகவும் நிலமை மோசமாகி ஆபத்

(8ம் பக்கம் பார்க்க)

மணலாற்றில் கண்ணிவெடி 3 படையினர் படுகாயம்

(கொழும்பு)

மணலாறு பகுதியிலுள்ள கஜபாத்புரத்தில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளின் கண்ணி வெடிக்கு இலக்காகி மூன்று படையினர் படுகாயமடைந்தனர்.

படையினர் கஜபாத்புரப் பிரதேசத்தில் ரோந்து சென்றுகொண்டிருக்கும் விடுதலைப்புலிகள் கண்ணி வெடி தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் காயமடைந்த படையினர் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ர-ரி

சட்ட விரோத ஆயுதங்களுடன் இராணுவ கப்டன் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் கைக்குண்டுகளையும் ஆயுதங்களையும் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பேரில் ராணுவ கப்டன் ஒருவரை பம்பலப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பம்பலப்பிட்டியிலுள்ள அவரது இல்லத்தில் திடீர் சோதனை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகள் அயலிலுள்ள காணியில் வெடிமருந்துகளும், ஆயுதங்களும் புதைத்து வைக்கப்பட்டிருந்ததை கண்டு பிடித்தனர்.

16 கைக்குண்டுகள், இரண்டு

(8ம் பக்கம் பார்க்க)

கொழும்பிற்கு

சத்திரசிகிச்சை நிபுணர் கணேசரட்ணம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சந்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எம். கணேசரத்தினம் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு சுகாதார அமைச்சினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பல வருடங்களாக யாழ். ஆஸ்பத்திரியில் சேவை மனப்பான்மையுடன் கடமையாற்றி வந்த சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எம். கணேசரத்தினத்தினத்தின் இட

(8ம் பக்கம் பார்க்க)

உ
சிவமயம்
விற்பனைக்கு

★ யாழ். ஆஸ்பத்திரி வீதி ★ கஸ்தூரியார் வீதி ★ ஸ்ரான்லிவீதிகளில் கடைகளும்
★ கடைகள் கட்டக்கூடிய நிலங்களும் மற்றும் யாழ். நாவலர் வீதி ★ பிறவுண் வீதி
★ பலாலி வீதி நல்லூர் [கோவில் வீதி] களில் சகல வசதிகளுடன் கூடிய வீடுகளும் விற்பனைக்குண்டு.

''பழமுதிர்ச்சோலை'' காரைநகர்.

தொடர்பு: கனகசபை தர்மகுலசிங்கம்
''விற்பனை முகவர்'' 539, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ-5397)

வரிவிளம்பரம்

வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அக்சர், ஆஸ்மா, மூட்டுவாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலை பிடி, தலைகாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கழிவு, கருவழிதல், மகப் பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப் படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்கு வீதி, மறவன்புலத்தெரு, யாழ்ப் பாணம். (சி-1667)

மலிவு விற்பனை

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், ரேணியோ இயந்திரங்கள் சிறந்த முறை யில் திருத்திக்கொடுக்கப்படும். மற்றும் தட்டச்சு, ரேணியோ இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் 66 மணிக் கூட்டு கோபுர வீதி, ஆஸ்பத் திரி முன்பாக, யாழ்ப்பாணம். (எ-5351)

பலவித பொருட்கள்

சகலவிதமான துவிச்சக்கர வண்டிகளும், உதிரிப்பாகங் களும், சிற்றிசன், சீக்கோ, கஷியோ கைக்கடிகாரங்கள், சுவர், மேசை மணிக்கூடுகள், சுடுதண்ணீர்ப் போத்தல், சகலவிதமான ரோச் லைற், விளையாட்டுப் பொருட்கள் [Spoits Goods] சகாய விலை யில் பெற்றுக்கொள்ள: புதிய நகர பல்பொருள் வணிக நிலை யம் (நியூ சிற்றி றேடர்ஸ்) 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (எ-5368)

பிரம்புப் பின்னல்

சகலவிதமான கதிரைகளும் உங்கள் வீட்டுக்கு வந்து பின் னித் தருபவர்கள்: ராஜன் பின்னலகம், 286, ஸ்ராண்லி வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப் பாணம். (எ-5374)

வெட்டுதாள் OFFCUT

76CmX6Cm அளவுள்ள வெட் டுத்தாள்கள் (OFFCUT) தொகையாக விற்பனைக் குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்; விபரங் களுக்கு:- களஞ்சியப் பொறுப் பாளர் ஈழநாடு, யாழ்ப் பாணம். (எ-5394)

(O.L) MATHS

Distinction பெறுபேறடைவ தற்காக 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் சகல Section களும் Portion களும் நிறைவேற்றப் பட்டு Section 8 Portion Revison உடன் Past Papers Practicem அளிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக் குழி. (சி 1705)

ஜாதக குறிப்புகள்

தரமான விசயங்களுடன் அழகாகத் தயாரிக்கப்பட்ட குறிப்புப் புத்தகங்கள் எம் மிடம் விற்பனைக்குள்ளன. சோபிதா 363, கே.கே.எஸ் சாலை யாழ்நகர். (சி -1765)

பாதிப்பு

(கொழும்புத்துறை)

சரசாலைப் பகுதியில் அண் மையில் பெய்த மழை வெள் ளத்தினால் பெரும் பகுதி நெல் வயல்கள் மீண்டும் விதைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது. 154

விற்பனைக்கு

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L, A/L பழைய வினாத்தாள்கள் (Tutes) 50 வீதம் தள்ளுபடி விலையில் விற்பனையாகின்றன. BOND யாழ்ப்பாணம். (எ-5382)

அப்பியாசக்கொப்பி துவாய் அன்பளிப்பு

மிகக்வைற் நீல சோப் மேலுறைகள் 500 அல்லது 3 டசின் நீலசோப் சுற்றிய தான் 50 தருபவர்களுக்கு ஒரு துவாய். 25 நீலசோப மேலுறை அல்லது சலவைப் பவுடர் வெற்றுப் பக்கற் றுகளுக்கு ஒரு அப்பியாசக் கொப்பி அன்பளிப்பு "மிகக் வைற்". (எ-5377)

கசெற்-பற்றறிகள்

உங்கள் அரிய ஒலியேற்றப் பட்ட கசெற்களை மிகத் தர மாகப் பிரதிபண்ணுவதற் கும் எமது ஒலியேற்றப் பட்ட கசெற்களை மிக சகாய விலைக்குப் பெறவும் சகலவித மீள சார்ஜ் செய்யும் பற்றறி களை (Rechargable Batteries) விஞ்ஞான ரீதியில் மின்னேற் றவும், எமது இலவச ஆலோ சனையைப் பெறவும் நாடுங் கள்: சக்தி தொழிலகம், இல, 15, விக்ரோறியா வீதி, (யாழ். ஆஸ்பத்திரி பின் வீதி) யாழ்ப்பாணம் (சி-1700)

விற்பனைக்கு

வளர்ப்பதற்குரிய நல்ல இன வன்றிக் குட்டிகளும், செவ்விளநீர் தென்னங்கன்று களும் விற்பனைக்குண்டு. கிண்ணாப்பம் இணுவில். (எ-5375)

ஆண்டு – 5 புலமைப் பரிசில் + பாடசாலை அனுமதி பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் - விடை களுடன் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப் படும். அடுத்த வெளியீடு 15.10.95 இன்றுஞாயிறு

BOND

யாழ்ப்பாணம்

(எ-5381)

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-10-15

ஞாயிறு இரவு

8-02 நீங்கள் கேட்டவை
8-30 செய்திகள்
8-40 தொடர் நாடகம் பொன். கணேசமூர்த்தி எழுதிய - "இலங்கை மண்" அங்கம்-15

1995-10-16

திங்கள் காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
8-00 மணிவரை நீங்கள் கோட்டவை நிகழ்ச்சி யின் தொடர்ச்சி

தமிழீழவானொலி நிகழ்ச்சிநிரல்

1995-10-15

ஞாயிறு மாலை

5-01 சிந்தனைச்சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 மழலைகளுக்காக
5-30 கதம்பம்
5-00 சிந்தனைக்குச் சில வினாடி கள்
6-02 உங்கள் தெரிவு
9-10 செய்திகள்
6-15 உங்கள் தெரிவு

இன்று

(கொழும்புத்துறை)

யாழ். சைவபரிபாலன சபையினால் கடந்த 1994 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சைவ நெறித்தேர்வு அகில இலங் கைப் பரிசளிப்பு விழா இன்று 15ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ் நாவலர் ஆச்சிரம மண் டபத்தில் சபையின் தலைவர் திரு.இ.மகேந்திரன் அவர் களமையில் நடைபெறும்; 154

மண்ணெண்ணை விநியோகம்

(நல்லூர்)

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் தமது சங் கப் பாவனையாளர்களுக்கு பகி கீட்டு அட்டை ஒன்றுக்கு நாலு லீற்றர் மண்ணெண்ணெய் சங்க கிளைகள் மூலம் வழங்கு வரு கின்றது. 175

ஆங்கில தின விழா

யாழ். இளையதம்பி இந்து வித் தியாலய ஆங்கில தின விழா நாளை 16ம் திகதி காலை 9-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலை மையில் நடைபெறும்; பிரதம விருந்தினராக உத விக்கல்விப்பணிப்பாளர் திரு. எஸ் அருளைநாயகம் கலந்து கொள்வார்.

விசேஷ அன்ரனி

ரூபவாஹினி, மட்ருஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனி பொருத்துவதற்கும்

வீடியோ கமரா, ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கும்

வீனஸ், டில்கா வாச் & றேடியே வேக்ஸ்

284. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை

பஸ் நிலையம், சாவகச்சேரி

Our Qualified Experienced Technical & Tutorial Staff

T. THANABALASINGAM B.Sc, [Ceylon]
Dip-in Electronic Engineering [Lond]
[Specialist in V C R Service] [A 5392]

கணக்கு பதிவாளர் தேவை

தமிழீழ சுகாதார சேவைகள் பணியகத்திற்கு ஆண் கணக்கு பதிவாளர் ஒருவர் தேவை:

அடிப்படைத் தகைமைகள்:

க.பொ.த. (உ/த) பரீட்சையில் கணக்கியல் உட்பட 2 திறமைச் சித்தியுடன் 3 பாடங்களில் சித்தி;

மேலதிகம்:

கணக்குப் பதிவியலில் முன் அனுபவம் அல்லது தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் பரீட்சை நெறி களில் சித்தி;

பாடத் திட்டத்துக்கு புறம்பான செயல்பாடுகள்:

பாடத் திட்டத்துக்கு புறம்பான செயல்பாடுகள் கல னத்தில் எடுக்கப்படும்;

வயதெல்லை: 21 - 45 வருடங்கள்

21-10-95 சனிக்கிழமை பி.ப. 2-30 - 3-30 க்கும் இடையில் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

முகவரி:-

தமிழீழ சுகாதார சேவைகள் பணியகம்,
6/2, இராசாவீதி (மணிக்கூட்டு வீதி)
யாழ்ப்பாணம்;

பொறுப்பாளர்.
தமிழீழ சுகாதார சேவைகள்
தமிழீழம்

[ஏ-5395]

வெளிவந்துவிட்டது! முற்றிலும் புதிய அமைப்பில்

அறிவுக் களஞ்சியம்-34

★ புதிய அளவு ★ அதிக பக்கங்கள்

★ அழகிய மேலட்டை விலை ரூபா 15/- (ஏ 5389)

Diploma in Pharmacology
28 10.95ல் ஆரம்பமாகின்றன
(சனி, ஞாயிறு வகுப்புகள்)

விரிவுரையாளர்:

Dr. V. P. சுந்தரராஜன்

குறிப்பு: சுதேசிய, ஹோமியோபதி மருத்துவ வர்களுக்கும் மருத்துவ மாணவர் கட்கும் மட்டும்.

சாயி மருத்துவக் கல்லூரி

இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (ஏ 5380)

யாழ், பேராதனைப் பல்கலைக்கழக (வெளிவாரி) விரிவுரைகள் 96/97

இலங்கை பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டப் பாட நெறிகளான

★ கலைமாணி (B.A.)
★ விஞ்ஞானமாணி (B.Sc.)
புள்ளி விபரவியல்
★ வணிகமாணி (B. Com.)

க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அண்மையில் க.பொ.த. உயர்தரம் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகள் எதிர் பார்த்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்;

விரிவுரைகள்: 5-11-1995ல் ஆரம்பமாகின்றன

விபரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூரி

73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்,

(ஏ 5393)

விடுதலைப்போர்-அமெரிக்க எதிர்ப்பு

உணவுமோசடி - செய்தித்தணிக்கை -

ஹர்த்தால்

சிறிலங்காவிற்கான நிரந்தர பிரதிநிதி ஏச். எல். டி. சில்வா மேற்கு நாடுகள் விடுதலைப்புலிகளின் அலுவலகங்களை மூடுவதற்கு முன்வர வேண்டுமென்று பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்கும் ஐ. நா. சபையின் சட்டக் குழுவின் முன் பேசும்போது கூறியுள்ளார். பயங்கரவாதச் செயல்களை திட்டமிடுவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் தங்கள் பிரதேசங்

களில் இடமளிக்கும் நாடுகளும் பயங்கரவாதக் குற்றச் செயல்களை புரியும் நாடுகளாகக் கருதப்படவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். இவரது பேச்சின்படி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் எல்லாம் பயங்கரவாதக் குற்றங்களைப் புரியும் நாடுகள் என்று கணிக்கப்படவேண்டும். ஏனெனில் இந்நாடுகளில் உலகின் பல பாகங்களில் உள்ள நாடுகளில் உள்ள பயங்கரவாதக்குழுக்கள் இருக்கின்றன. சட்டத் தரணிகளின் வழமை கறுப்பை வெள்ளை என்றும் வெள்ளையை கறுப்பென்றும் வாதாடுவது தான். ஏச். எல். டி. சில்வாவும் ஒரு சட்டத்தரணி. பயங்கரவாதக்குழுக்களுக்கும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் வித்தியாசம் தெரியாது

வாரசாரம்

அமெரிக்க எதிர்ப்பு

சிறிலங்கா அரசைப் பொறுத்தளவில் அமெரிக்க அரசாங்கம் தனது உறவை நெருக்கமாகக் கொண்டிராது. இரு நாட்டரசுகளுக்கு மிடையே குறிப்பாக சிறிலங்கா அரசுக்குக் கசப்புணர்வைக் கொடுத்துள்ளது. இதனால்தான் போலும் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் 51-வது மாநாட்டை ஆரம்பித்துவைத்து ஜனதிபதி சந்திரிகா ஆற்றிய உரையில் அமெரிக்காவைச்சாடும் பாணியில் பேசியுள்ளார். அவர் தமது உரையில் கெடுபிடி யுத்த நிலை முடிந்தபின் ஏற்பட்டுள்ள புதிய உலக ஒழுங்கு முறைகள் வளர்முக நாடுகளுக்கு சாதகமாக இருக்கவில்லை என்றும் வலிமைமிக்க நாடுகள் அனைத்தும் ஐ. நா. பாதுகாப்புச் சபையை தமது கைக்குள் வைத்திருக்கின்றன என்றும் சமாதானத்தைப் பாதுகாக்கிறோம் என்ற போர்வையில் அந்த நாடுகள் செய்வதை தட்டிக்கேட்க சிறிய நாடுகளுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை என்றும் கூறியுள்ளார். இப்பேச்சு அமெரிக்காவையே மறைமுகமாகத் தாக்குகிறது. சிறிலங்கா அரசு தான் செய்யும் பாவச் செயல்களுக்கு உடந்தையாக இராத அரசுகள் தன் எதிரி என்று கருதுகிறது.

உணவு மோசடி

குடாநாட்டு பட்டினிச் சாவை எட்டி இருக்கும் இவ்வேளையிலும் உணவுப்பொருட்

ச. தியாகராசா

தத்தளிக்கிறார் இச்சட்டத் தரணி. ஆனால் மேற்குலக நாடுகள் விடுதலைப்புலிகளால் தங்கள் நாட்டுச் சட்டங்கள் மீறப்படாத நிலையில் அவர்களுக்கு எதிராக செயல்பட முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் கதிர்காமருக்கு அறிவித்துவிட்டன.

களை அனுப்பாது விட்டு நாலு கப்பல்களில் உணவுப்பொருள்கள் அனுப்புவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று வாஞ்சையில் பொய்பிரசாரம் செய்யும் சிறிலங்கா அரசு உணவுப் பற்றாக்குறைபற்றியாழ். அரச அதிபர் கொடுத்த புள்ளிவிபரங்களைப்புறக்கணித்துவிட்டு பொய்யான புள்ளி விபரங்களைக் காட்டி வட பகுதியில் உணவுப்பொருட்கள் போதியளவு இருப்பில் உள்ளன என்று பொய்ப்பிரசாரம் செய்தது. உணவுப் பொருட்கள் முடிவடைந்து விட்டது, என்று அரச அதிபர் கூற வட பகுதிக்கு அனுப்பப்பட்ட சீமெந்து, தார், மண்ணெண்ணெய், டீசல் போன்றவற்றின் நிறையையும் உணவுப் பொருட்கள் என்று அவற்றையும் சேர்த்து கணக்குக்காட்டுகிறது. அரசு தான் செய்வது புத்திசாலித்தனம் என்று எண்ணலாம் ஆனால் மற்றவர்களிடமும் புத்திசாலித்தனம் உண்டு என்பதை தெரிந்து கொள்ளவேண்டும்.

செய்தித்தணிக்கை

சந்திரிகாவுக்கும் தகவல் துறை அமைச்சருக்குமிடையே தகவல் தணிக்கை சம்பந்தமாக முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது. தகவல்துறை அமைச்சரின் கையை மீறி பாதுகாப்பு அமைச்சு செய்தித்தணிக்கை முறையை நடைமுறைப்படுத்திவருவதாக தெரியவருகிறது. செய்தித்தணிக்கையால் தகவல்துறை அமைச்சின் வெளிப்பாட்டுச் சுதந்திரமும் பாதுகாப்பு அமைச்சின்

விரட்டல்களுக்கு பலியாகின்றது. பத்திரிகைச் சுதந்திரத்துக்கு வழிவகுப்பேன் என்று கூறிக்கொண்டு ஆட்சிக்குவந்த சந்திரிகா இப்போது அதன் குரல்வளையை நசுக்கும்வகையில் தணிக்கை என்றும் பத்திரிகையாளர் மீது வன்முறை பிரயோகித்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார். பத்திரிகையாளர்களுடனும் பத்திரிகைகளுடனும் முரண்பட்ட அரசுகள் முடிவில் பெரும்பாதிப்புக்குள்ளானவரலாற்றைச் சந்திரிகா

[7ம் பக்கம் பார்க்க]

நமது நோக்கு

கிளர்ச்சியும் விடுதலைப் போரும்

தென்பகுதியில் கடந்த காலங்களில் சிங்கள இளைஞர்கள் இரு தடவைகள் மேற்கொண்ட கிளர்ச்சியை அன்றைய அரசுகள் வெற்றிகரமாக முறியடித்தன. ஆனால் தமிழ் இளைஞர்கள் சாதுரியமாக கிளர்ச்சியை கையாளுவதால் அரசுக்கு அவர்களைத் தோற்கடிக்க முடியவில்லை என்று 'டெயிலி நியூஸ்' பத்திரிகை கவலையோடு எழுதுகிறது. ஜே. வி. பி.யின் 1971ம் ஆண்டுக் கிளர்ச்சியை சுதந்திரக்கட்சியும் 1989, 1990ம் ஆண்டுக் கிளர்ச்சியை ஐ. தே. கட்சியும் வெற்றிகரமாக தோற்கடித்தது உண்மைதான்.

'டெயிலி நியூஸ்' பத்திரிகைக்கு விளங்காத விடயம் ஒன்றுள்ளது. சிங்களவர்களை சிங்கள அரசைக் கவிழ்ப்பதற்கு கிளர்ந்து எழுந்து ஆயுத வன்முறைகளில் ஈடுபடுவது கிளர்ச்சி. ஆனால் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்கள் நடாத்துவது விடுதலைப் போராட்டம். இந்த முக்கிய வேறுபாட்டை 'டெயிலி நியூஸ்' பத்திரிகையால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. அரசாங்கத்தை கவிழ்த்து அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன் தெரிவுசெய்யப்பட்ட கிளர்ச்சிகளை உலகத்தின் அமெரிக்காவில் உள்ள அரசாங்கங்களும் உலகின் ஏனைய பாகங்களிலுமுள்ள அரசாங்கங்களும் படுதோல்வியடையச் செய்துள்ளன. ஆனால் எந்த நாட்டு அரசாங்கமோ அல்லது பிரிவினைவாத விடுதலைப்போர் அமைப்புக்களோ தோற்கடித்தது கிடையாது. அல்ஜீரியா, மொரோக்கோ, எரித்திரியா, குர்திஷ், ஸ்பெயின், பர்மா முதலான நாட்டு அரசாங்கங்களிலுமே கூட பிரிவினைவாத விடுதலைப் போராட்டங்களை அவற்றின் பகுதிகளில் வைத்துப் படை ரீதியில் தோற்கடிக்க முடியவில்லை. வட அயர்லாந்தில் உள்ள 30 000 பிரித்தானியப் படை வீரர்கள் அல்ஸ்ரரில் உள்ள 5000 காவல்துறையினரின் உதவியுடன்கூட விடுதலைக்குப் போராடும் 300 அயர்லாந்துக் குடியரசுப்படையினரை கடந்த இருபது ஆண்டுகளாகத் தோற்கடிக்க முடியாது இப்போது இருக்கும் ஒரே வழி பேச்சுவார்த்தைதான் என்ற நிலைக்கு பிரிட்டன் வந்துள்ளது. இவையெல்லாம் யதார்த்தமான வரலாறுகள்.

பட்டறிவுகளைக் கணக்கில் எடுக்காத சிறிலங்கா அரசு இராணுவத் தீர்விலேயே மூழ்கியிருக்கிறது. பெயரளவில் உலகை ஏமாற்ற தீர்வுத்திட்ட யோசனை மறுபக்கத்தில் தமிழர்மீதான இன ஒழிப்பு நடவடிக்கை. சிங்களப் பேரினவாத அரசுக்கும் சிங்களப் பேரினவாதிகளுக்குமிடையே ஒரு இரகசிய ஒப்பந்தம் இருக்கிறது: வெளியுலகுக்காக முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தை பகிரங்கமாக சிறிலங்காவில் எதிர்த்து அதை இல்லாமல் பண்ணுவதுதான் இவ்விரகசிய ஒப்பந்தம். இது பந்தயத்துக்கு மல்லுக்கட்டும் மல்யுத்த வீரர்களிடையே செய்யப்படும் இரகசிய ஒப்பந்தம் போலானது. ஆனால் அரசும் பேரினவாதிகளும் தமிழர்களை அழித்தொழிப்பதற்கு இராணுவத்தினருக்கு முழுப் பலத்தோடு பின்னால் நிற்கிறார்கள்.

சிறிலங்கா அரசு தனது தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தில் மேற்குலக நாடுகளின் பெருமளவில் உதவியாய் இருப்பர் என்று எதிர்பார்த்தது. மூன்றும் ஈழப் போரின் தொடக்கத்தில் ஓரளவுக்கு அரசுக்கு சார்பாக அந்நாடுகள் அறிக்கைகள் விட்டன. ஆனால் பின்னர் உண்மை வெளிப்பட்டு அரசுதான் யுத்தத்தில் மூன்றாம் நிறிகிறது என்று அறிந்தவுடன் படிப்படியாகப் பின்வாங்கியுள்ளன. இப்போது சிறிலங்கா அரசு இந்தியாவைத்தான் நம்பியிருக்கிறது.

இது ஒரு வெகுளித்தனமான போக்காகும். தனதுதேசத்தின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் வலையில் தான் இந்தியா தன் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும். உதாரணத்துக்கு தமிழ்நாடு மத்திய அரசாங்கத்துக்கு அச்சுறுத்தல்விட்டால் புதுடில்லியின் போக்கு மாற்றமடையும்.

எனவே சந்திரிகா உலக நாடுகளின் அனுசரணையுடன் இராணுவ நடவடிக்கைமூலம் தமிழர்களை அழித்தொழிக்கலாம் என்பது வீண் கற்பனையேயாகும்.

ஈராக் ஜனதிபதி சதாம் ஹுசெய்னின் மகனுல்

ஈராக் பலவீனமான நாடாகும் நிலை ஏற்பட்டுள்ளது

மத்திய கிழக்கில் முடிசூடாமன்னனாக இருந்த சதாம் ஹுசெயினுக்கு அட்ட மத்தில் சனியன்போலும்.

இடர்மேல் இடர் வந்த போதும் அசையாமல் இருந்த ஈராக்கிய ஜனதிபதி சதாம் ஹுசெயின் அண்மையில் தன் சொந்தப் பெண்பிள்ளைகளாலும் மருமக்களாலும் கைவிடப்பட்ட நிலையில் கவலையுற்று காணப்படுகிறார்.

சொற்ப காலத்திற்கு முன் அணுகுண்டு உற்பத்தி செய்யும் மூலப்பொருட்கள், ஸ்கட் ஏவுகணைகள் மற்றும் அழிவை உண்டுபண்ணும் இரசாயன ஆயுதங்களை ஈராக் சேகரித்து வைத்திருந்தது. மத்தியகிழக்கில் ஈராக்ஒரு வல்லரசாக திகழவேண்டும் என்ற எண்ணத்தில் இவைகள் சேகரிக்கப்பட்டன, உற்பத்தி செய்யப்பட்டன. மறைவிடங்களிலும் பாதாள உலகிலும் இவைகள் மறைக்கப்பட்டு தக்க தருணத்தில் பயன்படுத்தும் வகையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இவை

உலக வலம்

களபற்றிய இரகசியங்கள் நம்பிக்கைக்குரிய இராணுவத்தளபதிகளுக்கும் சதாம் ஹுசெயின் உறவினருக்குமே தெரிந்திருந்தன. முக்கியமாக ஜோர்தானுக்கு தற்போது தப்பி யோடி தங்கியிருக்கும் அவரது மருமகன்மாருக்கும் மகள் மாருக்கும் தெரிந்திருந்தன. இவர்களை மீள ஈராக்கிற்கு அழைக்க தன் மனைவியையும் மகனையும் ஜோர்தானுக்கு அனுப்பியும் சரிவராத நிலையில் இந்த மறைவிடங்கள் தற்போது ஓரளவில் மாற்றப்பட்டுவிட்டன.

குவைத்துடனான போரின் பின் ஐ. நா. சபையால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடை, ரசாயன ஆயுத அழிப்பு போன்ற தண்டனைகளால் சதாமின் திட்டம்எல்லாம்தவிடுபொடியானது, தற்போது நம்பிக்கைக்குரிய மருமக்களும் தப்பியோடிய நிலையில் இரகசியங்களும் வெளியாகிவிடும் என்ற யோசனையில் சதாம் ஹுசெயின் பெட்டிப் பாம்பாகிவிட்டார்.

"அப்பன் ஒரு அடி பாய்ந்தால் மகன் 6 அடி பாய்வான்" என்பதுபோல் சதாம்ஹுசெனின் மகன் உதே தற்போது தந்தையை வெல்லுமளவுக்கு கருமமாற்றுகிறார், தனக்கு இயலாத நிலையில் சதாம் தன் பொறுப்புக்கள் சிலவற்றை உதேய்க்கு கொடுத்துவிட்டார்.

உதே அப்போதே சர்வாதிகார போக்கு கொண்டவர். தந்தையின் செல்லப்பிள்ளையாக இருந்தவர். முதலில் தன் சகோதரிகளுடன் முரண்பட்டுக்கொண்ட உதே, பின்னர் தன் அத்தான்மாருடனும் முரண்பட்டுக்கொண்டார். இரு மருமகன்மாரும் ஜோர்தானுக்கு தப்பியோட உதேதான் காரணம் என்பது தற்போதுதான் சதாம்

கவிதாஸ்

ஹுசெயினுக்கு தெரியவருகிறது.

எனினும் நடந்தவை நடந்தவையாகக் கருதி, நடக்க விருப்பவை சரியாக நிறைவேற தன் மகனுக்கு தட்டிக் கொடுக்கிறார் சதாம் ஹுசெயின்.

ஈராக்கிய ஜனதிபதியை பத

[7-ம் பக்கம் பார்க்க]

ஈழத்தமிழரை ஒடுக்குவது வெளியுறவின் சமன்பாட்டை தடுக்கிறது

நுகர்வோரைத் தம்மால் கவர்வதற்கு அழகு சாதனப் பொருட்களை வைத்திருப்பவனும் விளம்பரம் செய்கிறான், சவப்பெட்டிகளை வைத்திருப்பவனும் விளம்பரம் செய்கிறான்.

இந்தியாவைத் தம்பக்கம் கவர்வதற்கு சந்திரிகா அரசாங்கம் இப்போது ஒரு புது விளம்பரத்தினை ஆரம்பித்திருக்கிறது.

''இந்து சமுத்திரத்தை சமாதானப் பிராந்தியமாக்க வேண்டும்'' என்று சந்திரிகாவின் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த வாரம் நியூயோர்க்கில் கருத்து வெளியிட்டார். இதுபற்றி இந்திய வெளி விவகார அமைச்சர் பிரணப் முகர்ஜி உடனும் அவர் அங்கு உரையாடினார்.

''ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினராய் அங்கம் வகிப்பதற்கு இந்தியாவிற்கு சகல தகுதியும் அருகதையும் உண்டு'' என்று கதிர்காமர் இவ்வாரம் கொழும்பிற் கருத்து வெளியிட்டார்.

இவை தற்செயலனாவையோ அன்றி ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்படாத செய்திகளோ அல்ல, திட்டவட்டமான ஓர் இலக்கை நோக்கித் தெரிவிக்கப்படும் கருத்துக்கள்.

சந்திரிகா அரசாங்கத்தின் மூளையில் சில எண்ணங்கள் உதிக்கின்றன, அந்த எண்ணங்களே கோடிகாட்டும் கருத்துக்களே இவை.

ஈழத்தமிழர் விவகாரத்தில் சந்திரிகா அரசாங்கத்திற்கும், நரசிம்மராவ் அரசாங்கத்திற்கும் இடையில் ஒத்த கருத்து எட்டப்படவில்லை. சந்திரிகா அரசாங்கத்தின் விருப்பங்களுக்கு நரசிம்மராவ் அரசாங்கம் உடன்படுவதாயில்லை. இந்தியா சற்று முரண்டு பிடிக்கின்றது. மேற்குலகும் இலங்கை விரும்பும் அளவிற்குப் அதற்குப்பச்சை விளக்குக் காட்டுவதாயில்லை. இதனால் இந்தியாவை அணைத்தெடுப்பதற்கு மேற்ற சில புதிய நடவடிக்கைகளில் இலங்கை இப்போது ஈடுபட்டுள்ளதெனலாம்.

சோவியத் யூனியன் குலைய முன்பிருந்த கெடுபிடியுத்த அரசியல் உறவு உலகலாவிய அர்த்தத்தில் இப்போதில்லை கெடுபிடி யுத்தம் நிலவிய காலத்தில் இருந்த வெளியுறவுக் கொள்கை வகுப்பு என்பது ஓர் இலகுவான சூத்திரவகைப்பட்டதாய் இருந்தது. இரண்டில் ஒரு பக்கம், அந்தப்பக்கம் அல்லது இந்தப் பக்கம் என நிலைப்பாட்டை எடுத்து இலகுவாக கொள்கையை வகுத்திடலாம்.

ஆனால் கெடுபிடி யுத்தம் முடிந்த பின்பு நிலைமை அப்படி இல்லை. உலகலாவிய அர்த்தத்தில் சோவியத் யூனியனுடனான அமெரிக்காவின் கெடுபிடி யுத்தம் முடிவடைந்துவிட்டது, ஆனால் பிராந்திய வல்லரசுகளுடன் அமெரிக்கா தற்போது கெடுபிடி யுத்தம் புரிகிறது.

கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்யாவிற்கும் அமெரிக்கவிற்கும் இடையில் கெடுபிடி யுத்தம் உண்டு. ஆசியாவில் சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் கெடு பிடியுத்தம் உண்டு. தென்னாசியாவில் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் கெடுபிடி யுத்தம் உண்டு. இப்போது அமெரிக்கா பிராந்திய அளவிற் கெடுபிடி யுத்தங்களை எதிர்கொள்கின்றது. இத்தகைய பின்னணியில் வெளியுறவுக் கொள்கை வகுப்பு மிகவும் சிக்கலான நிலையை தற்போது அடைந்துள்ளது.

அதாவது முன்பு கெடுபிடி யுத்தம் உலகலாவிய அர்த்தத்தில் நிலவிய காலத்தில் வளரும் நாடுகள் அமெரிக்கா அல்லது சோவியத் யூனியன் எனும் இரண்டில் ஒன்றை அண்டித்து தமது கொள்கையை இலகுவாக வகுக்க முடிந்தது. அமெரிக்காவோ அல்லது சோவியத் யூனியனோ கெடுபிடி யுத்தத் தேவையின் பொருட்டு நாடுகளை தம்பக்கம் அணி சேர்ப்பதற்காக தமைச் சாரும் நாடுகளுக்கு விட்டுக்கொடுப்புக்களை செய்து அணைக்க வேண்டி இருந்தது. ஆனால் கெடுபிடியுத்தம் முடிந்தபின்பு உலகளாவிய அர்த்தத்தில் ஏனைய நாடுகளை அணைத்து நடாத்தவேண்டும் என்ற அவசியம் அமெரிக்காவுக்கு இல்லை. இதனால் வளரும் நாடுகள் பேரம் பேசும் பலனின்றி தவிக்கலாயின. இது புதிய உலக ஒழுங்கில் உள்ள முதன் நிலைப் பிரச்சினை.

மு. திருநாவுக்கரசு

அடுத்து, பிராந்திய நீதியில் ஓர் எஜமான்; உலகளாவிய நீதியில் இன்னொரு எஜமான். இந்த இரு எஜமானர்களுக்கும் இடையில் எப்படி அமைதி காணும் வகையில் கொள்கை வகுப்பது என்பது இரண்டாவது பிரச்சினை.

இதில் பிராந்திய எஜமானுக்கும் உலக எஜமானுக்கும் இடையில் உள்ள உடன்பாடுகளைப் புரிந்துகொள்ளவேண்டும். அதேபோல இருதரப்பினருக்கும் இடையிலான முரண்பாடுகளையும் புரிந்து கொள்ளவேண்டும். இந்த முரண்பாடுகளுக்குள் சிக்கிக் கொள்ளாது இருப்பதும், உடன்பாடுகளைச் சாதகமாக்கிக்கொள்ள முயல்வதுதான் வெளியுறவுக் கொள்கை வகுப்பின் பிரதான விடயமாகும் ஓர் அரசு தனது பிராந்தியத்திற்குள் உறவுகொள்ள முற்படும்போது தான் இது பொருந்தும். ஓர் அரசு தனது பிராந்தியத்திற்கு வெளியே உறவு கொள்ள முற்படும் போது அந்தப் பிராந்தியத்திற்கும் உரிய யதார்த்தத்தை அது இதேவாறு எதிர்கொள்ள வேண்டும்.

இதனால் ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையில் ஓர் ஒருமைப்பாடு இருக்கமுடியாது. ஆனால் அவ்வாறு வேறுபாடுகள் நிலவுமேயாயினும் அந்த வேறுபாடுகள் உலக எஜமானின் நலன்களுடன் முரண்படுவதாய் இருக்கமுடியாது. அப்படியாயின் ஓர் அரசானது உலக எஜமானுக்கு நன்மை பயக்கும் வகையிலும் தனது பிராந்திய எஜமானரைத் திருப்திப்படுத்தும் வகையிலும், ஏனைய பிராந்திய எஜமானர்களுடன் ஈடுகொடுக்கும் வகையிலும் தனது வெளியுறவுக் கொள்கையை வகுக்கவேண்டி உள்ளது.

எனவே இன்றைய சூழலில் ஒரு பிரதான முகமும் வேறு பல முகங்களும் கொண்ட ஒரு பன்முகத் தன்மை வெளியுறவுக் கொள்கையில் இருக்கும். இத்தகைய நெருக்கடியின் மத்தியில் ஈழத் தமிழரை ஒடுக்குவதானது, சமநிலை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை மேலும் இல்லாது செய்கிறது.

இந்தப் பன்முகத் தன்மை யின் பிரகாரம் லக்ஷ்மன் கதிர்காமர் நியூயோர்க்கில் நின்று கொண்டு ''இந்துசமுத்திரத்தைச் சமாதானப் பிராந்தியம் ஆக்கவேண்டும்'' என்று அறிவித்தார் இந்துசமுத்திரத்தைச் சமாதானப் பிராந்தியம் ஆக்குவது என்பது இந்து சமுத்திரத்தில் இந்தியாவை வல்லமை பொருந்திய சக்தியாக்குவது என்பதுதான். இதேபோல ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவை நிரந்தர அங்கத்துவமுள்ள நாடாக்கவேண்டும் என்றும் இலங்கை குரல் கொடுப்பதன் மூலம் இந்தியாவின் உயர்ந்த பட்ச நட்பைப் பெறலாம் என சந்திரிகா-லக்ஷ்மன் கதிர்காமர் குழாம் நம்புகின்றது.

இதன் தந்திரம் இப்படித்தான் உள்ளது. அதாவது ஈழத் தமிழர் விவகாரத்திற்கு வெளியேயான வெளி நாடுகளுக்கும், இந்தியாவிற்கும் இடையிலான விவகாரத்தில் இந்தியாவை திருப்திப்படுத்துவதன் மூலம் ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் ஆதரவை இலங்கை தேட முனைகிறது.

சந்திரிகா - கதிர்காமர் குழாத்தின் இத்திட்டம் சிறுபிள்ளைத்தனமானது. இது ஒரு முதிராப் பருவ அறிவுக் கோளாறு. ஏனெனில் இந்து சமுத்திரத்தை அமைதிப் பிராந்தியமாக்குவது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. அது எப்போதோ கைவிடப்பட்டும் விட்டது. அதாவது இலங்கையின் இந்த அறிவிப்பைக் கேட்டு, அமெரிக்காவும், இந்தியாவும் வாழைப்பழத்தோலில் சறுக்கி வீழ்ந்த ஒரு சிறுபிள்ளையைப் பார்ப்பதுபோல் பார்க்கும்.

அதேபோல் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவிற்கு நிரந்தர அங்கத்துவம்

[7-ம் பக்கம் பார்க்க]

ஈழக்கடலில் ஆழக் காலூன்றிய சோழர் வழியில் வேங்கைக் கடல் வீரர்!

அத்தியாயம் — 10
மாந்தைத் துறைமுகம்

கிறிஸ்துக்குப் பிற்பட்ட காலத்திலே, 'ஈழம்' என்ற அழகிய நாட்டின் பசுமையும்-வனப்பும் - இயற்கை யன்னை எழில்கொஞ்ச நடனமிடும் பிரதேசங்களும் உலகின் பல பாகங்களிலுமுள்ள மக்களைக் கவர்ந்து இழுக்கத் தொடங்கியது.

மலையும். மலைசூழ்ந்த இடங்களும், கடலும், கடல்சூழ்ந்த பகுதிகளும், வயல்களும், வயல் சூழ்ந்த பகுதிகளும், ஆறுகளும், காடுகளுமாக ஈழமண் எழில்தவழும் நாடாகத் திகழ்வதை அறிந்து மக்களினம், இம்மண்ணில் வாழ்வதற்காக முண்டியடித்துக்கொண்டு ஓடிவர ஆரம்பித்தது.

ஆரம்பகாலத்திலே 'ஈழம்' மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையாவன:

1. வடபகுதி - இது அனுராதபுரத்தைத் தலை நகராகக் கொண்டது.
2. ருகுண - இதுதென்-கிழக்குப்பகுதி இதன் தலை நகரம்மாகம(Magama) என்பதாகும்.
3. களனி கங்கைப் பிரதேசம் - இதற்குத் தலை நகரமாக கல்யாணி அல்லது களனியா என்ற இடம் அமைந்திருந்தது.

வடபகுதியானது மூன்று ஆறுகளை மையமாகக் கொண்டிருந்ததுடன், மாதோட்டம் என்றழைக்கப்படும்மாந்தைத் துறைமுகத்தையும் தன்னகத்தே கொண்டிருந்தது மாந்தைத்துறைமுகம் ஒருமாபெரும் துறைமுகமாக அன்று விளங்கியது. வெளிநாடுகள் பலவற்றின் வியாபாரிகளும், மாதோட்டத்திலே அக்காலத்தில் புற்றீசல்போல வந்து குவிந்துகிடந்தனர். முத்தும் - பவளமும் - சங்கும் யானைத் தந்தமும் துறைமுக வீதியில் குவித்துவைத்து விற்கப்பட்டன.

கிரேக்க - ரோம தேசங்களில் இருந்தும் சீன அரேபிய தேசங்களில் இருந்தும் வணிகர்கள் இத்துறைமுகத்தில் இறங்கி, இம்மண்ணின் இயற்கைச் செல்வங்களைக் கண்டு மெய்மறந்து. அவற்றை வீலைக்கு வாங்கிக்குவித்து கப்பலேற்றிச் சென்றதாக வரலாற்று நூல்கள் மூலம் அறியமுடிகிறது. (ஆதாரம்: யாழ்ப்பாணச் சரித்திரம் - முதலியார் இராசநாயகம்)

கிரேக்க - ரோம தேசங்களில் இருந்துவரும் வியாபாரிகள் எகிப்திலே அலெக்சாந்திரியா என்னும் அழகிய நகருக்குக் கப்பலில்வந்து, எகிப்தினூடாக செங்கடல் மூலம் பயணம்செய்து, செங்கடலின் வடதிசையில் அமைந்திருக்கும் ''பெரினயிசி'' என்னும் துறைமுகத்தை அடைந்து, அதிலிருந்து வங்கதேசம் வந்து கடற்கரை வழியாக இந்தியா ஈழம் ஆகிய தேசங்களுக்கு வந்தனர்.

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

அரேபியரோ, இவ்வழி மூலம் கிரேக்கருக்கு முன்பாக வரத்தொடங்கியவர்களாவர். மன்னாரிலும் மாதோட்டத்திலும் காணப்படும் 'பெருங்கு' ['பேரீச்சை'] மரங்கள் அரேபியரால் கொண்டுவரப்பட்டவையே (யாழ்ப்பாணச்சரித்திரம் -முதலியார் இராசநாயகம் - பக்கம் 19)

கி. பி. 50ம் ஆண்டளவிலே வங்காளக் குடாக்கடலுக்கு ஊடாக கீழைத்தேசங்களுக்குச் செல்லும் மரக்கலங்களும். ஆனையிறவுக்கடலின் ஊடாகப் போக்குவரத்துச் செய்வதுண்டு. 'பூதூக்கி' எனப்படும் பூநகரியும் தவக்கோடி எனப்படும் கல்முனையும் நாவந்துறையும் அன்று சிறிய துறைமுகங்களாக விளங்கின.

நாவாந்துறை

நாவாந்துறையில் இருந்து ''சங்கடம்'' என்னும் தோணிகள் மூலம், அன்று ஆழமாகவும் - அகலமாகவும் இருந்த வழுக்கி ஆற்றினூடாகக் கதிரமலை என்னும் கந்தரோடைக்கு வியாபாரப்பொருட்கள் ஏற்றிச் செல்லப்பட்டன. [யாழ்ப்பாணச் சரித்திரம் - பக்கம் 19 - 20] இதனால் நாவாந்துறை சங்கடநாவாந்துறை என்னும் பெயரும் அன்று வழங்கி வரலாயிற்று. இது மட்டுமன்றி இச் சங்கடம் என்னும் மரக்கலங்களைச் சொந்தமாக வைத்து வியாபாரம் செய்து வந்த வியாபாரிகளை 'சங்கடத்தான்' என்றும் மக்கள் அழைத்தனர் இப்பெயர் இன்றும் ஊர்காவற்றுறை கரம்பொன் - நாவாந்துறை போன்ற இடங்களில் வாழும் மக்கள் மத்தியில் வழக்கிலிருப்பது குறிப்பிடத்தக்கது.

மாந்தைத்துறைமுகம் சில வரலாற்று நாயகர்களின் காலடிபட்ட துறைமுகமாகும். விஜயன் பரம்பரையினரில் பலரும் - சங்கமித்தை என்ற மாபெரும் பிக்குணியும் மட்டுமல்ல, விஜயனுக்குப் பாண்டிய நாட்டிலிருந்துஅனுப்பப்பட்ட மணப்பெண் கூட இத்துறைமுகத்தினூடாகவே வந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். இந்தியாவுக்கும் ஈழத்திற்கும் இடையே ஒருகலாச்சாரப் பாலமாகவும் மாந்தைத்துறைமுகம் ஒரு காலத்தில் விளங்கியது எனலாம்.

[தொடரும்]

பாவியுங்கள் அண்ணபற்பொடி
பாவித்த வெற்றுப் பக்கற்றுகளை கொடுத்து அன்பளிப்புப் பொருட்களை பெற்றுக்கொள்ளவும்
(ஏ-5376)

ஊமை மேகங்கள்.

பொன். கணேசமூர்த்தி

அந்த நள்ளிராப் பொழுதில் வடக்குத் திசையில் ஆயிரஞ் சூரியன் எழுந்தது போல வெளிச்சம் எரிந்து கொண்டிருந்தது...படுத்திருந்த என்னை மனக்கலவரத்தோடு மனைவி எழுப்பினாள்.

''இஞ்சேருங்கோ.....பரா வெளிச்சம் அடிக்கிறுங்கள்''

தலையை நிமிர்த்திப் பார்த்தேன். வடக்கு வானம் இருளைத் தின்று, வெளிச்சத்தை உமிழ... அந்தரத்திலே சூரிய நாட்டியம் வேட்டோசைகள் எறிகணைப்பேரோசைகள்...

'நிலந்தின்னி'கள் நவக்கிரி, புத்தூர் வரை முன்னேறியிருக்கின்றன என்பது அன்று மாலை வரை எனக்குத் தெரிந்த சேதி.

புலிகள் பாயத் தொடங்கி விட்டன என்பது 'வடக்குத் திசை'யிலே நான் கண்ட தரிசனம்...

எழுந்துகொண்டேன்..... மாடிவீட்டிலிருந்து தெளிவாகத் திசை பார்க்க முடிந்தது விடிகாலை வரை நின்றுகொண்டே... நினைத்துக் கொண்டே.....நெகிழ்ந்து கொண்டே...

ராசாத்தியும் பக்கத்திலே நின்றுகொண்டுதான் இருந்தாள். அவள் முகத்திலே கணத்துக்குக் கணம் மாறும் உணர்வுகளை...என்னால் படிக்க முடிந்தது.

''பிள்ளையள் உள்ளுக்குப் போட்டாங்கள் போல...''

என்னைப் பாராமலே அவள் சொன்னாள். அவளைப் பாராமலே நான் தலையை ஆட்டிக் கொண்டேன். நெஞ்சுக் குள்ளே எதிரியில்லாமலே பெரும்போர் நிகழ்ந்து கொண்டிருந்ததை இரண்டு பேருமே ஒருவருக்கொருவர் மறைத்துக்கொண்டோம்.

ஊமை மேகங்களாக எங்கள் உணர்வுகள் நகர்ந்து... நெகிழ்ந்து...கரைந்து.. பிறகு மீண்டும் உருக்கொண்டு... குலைந்துபோய்...மீண்டும்... இதை எவருக்குச் சொல்ல முடியும்...

வேட்டோசைகளும், எறிகணை உறுமல்களும் உலராமலே காலை புலர்ந்துவிட்டது. முதுமையடைந்துபோன பற்றறியின் உதவியோடு மெல்ல முனகியவாஞ்லிக்குள்காதை வைத்துக்கொண்டேன்.

''நூற்றி ஐம்பது போராளிகள் வீரமரணம்.....மின்னல் தாக்குதலை எதிர்த்து...எனக் குள்ளே குளிரோடியது...ரத்தம் உறைந்து போனதுபோல உணர்வு ..... ராசாத்தியை மெதுவாகப் பார்க்க அவள் நெஞ்சத்துச் சேதி கண்வழியாகக் கீழே இறங்க. படித்துப் பார்த்த நான் பாரந் தாங்காமல் இமைகளை மூடித் திறந்துகொண்டேன்...

குளித்து முடித்து வழக்கம் போலவே வேலைக்குப் புறப்பட்டேன்.

வழக்கம்போல ராசாத்தி வாசல் வரை வந்தாள்.

''அவள் சாற்றிலே நடக்கிறுளா?''..... காரணத்தின் சுமை என்னை அழுத்த மௌனமாக...நடுங்கும் கரங்களால் 'யமஹா'வுக்கு உயிர் கொடுக்க சூப்பியைத் தூக்கிக்கொண்டேன்.

மத்தியானம் சாப்பிட முடியவில்லை...உப்பை அள்ளிக் கொட்டிவிட்டதாகப் பொய்யாகக் கோபித்துக்கொண்டேன். உண்மையில், ராசாத்தி உப்பைப் போடவே மறந்துபோயிருந்தாள்.

எதைப் பேசுவது...எப்படிப் பேசுவது...எல்லாமே குழப்பமாகத் தெரிந்தது.

''அதை நினைக்காதே... நினைக்காதே..''

மனதுக்குக் கடிவாளமிட முனைந்து.....வழக்கம்போலத் தோற்றுப்போய்..... கண்களை மூடிக்கொண்டால்.....'.அது தான்' நினைவுக்கு வந்தது.

அன்றிரவு.....

புலிகளின்குரல் பெயர்களை வாசித்தது...வீரவணக்கம் சொன்னது...

இல்லை...,.இதற்குள்ளே இல்லை

செய்தி கேட்டு முடிந்தபின் ராசாத்தியைப் பார்த்தேன்... அவள் ஏற்கனவே என்னைத் தான் பார்த்துக்கொண்டிருந்தாள். ஊமை மேகங்கள் பேசாதவரை .. அதனுள்ளே உயிர்க்கும் உணர்வுகளை எவரால் படிக்க முடியும்?

வாஞ்லி பாடத்தொடங்கியது.

''நீரடித்து நீரிங்கு
விலகாது அம்மா
நெஞ்சிலுள்ள பாசம்
என்றும் அகலாது
அம்மா''.....

நான் ராசாத்தியையே கவனித்துக்கொண்டிருந்தேன்...அந்தப் பாடல் அவளுக்குள் ஆயிரம் அர்த்தங்களைச் சொரிவது எனக்குப் புரிந்தது.

போராளிப் பெண்ணைருத்தி தாயைப் பார்த்துப் பாடும் பாடல்...அது ஒரு தாயின் நெஞ்சுக்குள்ளே... இறங்கி. ..இறங்கி.....இறுக்குவதைப் பார்த்தபடி இருந்தேன்...

''வெற்றி மகளாய்
வருவேன் பெருமைப்படு
அம்மா
வீழ்ந்து விட்டால்
குழியினிலே நீரைவீடு
அம்மா
சுற்றி வந்து
தீபமொன்று ஏற்றிவிடு
அம்மா.....
சூழ்ந்து நிற்ப
வரைப் பார்த்து
கவலைவிடு அம்மா.....

பாடல் உள்ளத்தை உருக்கியபடி தொடர்ந்தது.

ராசாத்தியின் முகம் சிவந்து வருவது குப்பி விளக்கின் வெளிச்சத்திலே எனக்குத் தெரிந்தது. திடீரென்று என்னைப் பார்த்து மெல்லப் புன்னகைத்தாள்.

எனக்குப் புரிந்துவிட்டது.

நியாயத்தின் அர்த்தங்கள்...மனத்தின் அழுதத்தை நெகிழ வைத்துவிட்டது.

மெதுவாக எழுந்து மேசையிலே அமர்ந்து எழுதத் தொடங்கினேன்.

என் இனிய குஞ்சுகளே...

நீங்கள் சொல்லிவிட்டுப் போகவில்லை...நீங்கள் எங்களைப் பிரிந்த இடம் நாட்டையும் உங்களையும் நீங்கள் புரிந்த இடம்...வீரராக செத்தாலும், பிழைத்தாலும் உங்களுக்கு வாழ்விருக்கிறது. என் உயிர்க் குஞ்சுகளே...நீங்கள் வாழ்வதற்காகப் போராடுங்கள்... சாவதற்கு அல்ல... வாழ்வதற்கு... வாழ்வதற்கு மட்டுமே!

எழுதி முடிக்கும் போது வடக்கிலே பயங்கர வெடியோசைகள்...

பராஒளி வட்டங்கள்...

''சண்டை துவங்கியிட்டுது போல...'' சொல்லியபடியே நான் எழுந்து நடந்து மாடி ஏறியபடியே ராசாத்தியைப் பார்க்க.. அவள் திடமாகக் கால் பதித்து ஏறிக்கொண்டிருந்தாள்...ஊமை மேகங்கள் கரையைத் தொடங்குவதாக நான் உணர்ந்தேன்.

''சில நேரம்...பிள்ளையளோட எங்கட பிள்ளையளும்...'' போயிருப்பாங்கள்'...முடியாத கேள்வியை முடித்துவிட்டு நான் நடக்க அவள் என்னைத் தொடர்ந்து வர...

கனக்காத இதயங்களோடு, வடக்கு வானத்தை இருவரும் கண்களால் அளந்தோம்.

[யாவும் கற்பனை]

தமிழ்ப் பத்திரிகையாளரிடம் வசமாக மாட்டிக்கொண்ட இரு சிங்கள இராணுவச் சிப்பாய்கள்

உண்மைச் சம்பவம்

கொழும்பு மத்திய பஸ் நிலையத்திலிருந்து கண்டிநோக்கிச் செல்லும் கடுகதி பஸ் வண்டி புறப்படத்தயாரானது. கடைசி நேரத்தில் நாலுபேர் ஓடிவந்து பஸ்ஸில் ஏறினார்கள். இருவருக்கு மட்டும் தான் இருக்கைகள் காலியாக இருந்தது. இருவர் நின்றுகொண்டே பயணம் செய்தார்கள்.

நீண்ட நேரத்தின் பின்பு பஸ் வண்டி கடுகண்ணவையில் தரித்து நின்றபோது பஸ் வண்டியிலிருந்து ஒருவர் இறங்கினார். நீண்டநேரம் நின்று கொண்டு பயணம்செய்த இருவரில் ஒருவர் அந்த காலியான இருக்கையில் அமர்ந்தார். சிறிது நேரத்தின் பின்பு பஸ் புறப்பட்டபோது புதிதாக இருக்கையில் இருந்தவருக்கும், அருகில் இருந்தவருக்குமிடையில் வாக்குவாதம் ஆரம்பமானது. புதிதாகஇருக்கையில் இருந்தவர் ஒரு மாத்தளைத் தமிழர். அவர்அருகில் இருந்த இருவரும் சிங்கள இளைஞர்கள்.

கொழும்பிலிருந்து நின்று கொண்டு பயணம் செய்யும் மற்றைய சிங்களநபர், இந்த இரு சிங்கள இளைஞர்களுக்கும் நன்கு தெரிந்தவர். இதனால் அந்த மாத்தளைத் தமிழரை எழுந்து நின்று பயணம் செய்யும்படியும், அவரின் இருக்கையை தமக்கு தெரிந்த நபரை அமர்வதற்கு அனுமதிக்கும்படியும் கூறினார்கள் அதற்கு அந்த தமிழர் மறுப்புத் தெரிவிக்க வாக்குவாதம் வலுவடைந்தது. அந்த இரு சிங்கள இளைஞர்களும் தமிழரின் அடையாள அட்டையை காண்பிக்கும்படி மிரட்டினார்கள், அதற்கும் அவர் மறுப்புத்தெரிவித்தார். கொழும்பிலிருந்து அவதானித்துக் கொண்டுதான் வருகிறோம்'' என்று ஒரு சிங்கள இளைஞன் கூறினார். ''நானும் உங்களை அவதானித்துக்கொண்டுதான் வருகின்றேன்'' என்று அந்த தமிழரும் கூறினர்.

கடைசியாக பஸ் வண்டி கண்டி பஸ் நிலையத்தை வந்தடைந்தபோது அங்கு ரோந்து நடவடிக்கையில்ஈடுபட்டிருந்த பொலிசாரிடம் அந்த இரு சிங்கள இளைஞர்களும் ஏதோ ரகசியமாக கூறினார்கள். உடனடியாக பொலிசார் அந்தத் தமிழரைக் கைது செய்து சிங்கள இளைஞர்களையும் அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலையம் சென்றனர். அங்கு நடைபெற்ற விசாரணையில் மாத்தளைத் தமிழர்,

தேவா

விவசாய இலாகா உத்தியோகத்தர் என்பதம், அவர் கொழும்பு லேக்ஹவுஸ் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் மாத்தளை நிருபர் என்பதும், மாத்தளை பொலிஸ் நிலைய அதிகாரியின் நெருங்கிய நண்பர் என்பதும் தெரியவந்ததும் அந்த இரு சிங்கள இளைஞர்களுக்கும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

இதேநேரம் அந்த இரு சிங்கள இளைஞர்களும் யார்? இவர்கள் என்ன செய்கிறார்கள்? என்ற விபரங்களை தனக்குத் தெரியப்படுத்தும்படி கண்டி பொலிஸ் அதிகாரியிடம் அந்தத் தமிழர் கோரியதுடன் இந்த இரு சிங்கள இளைஞர்களும் தன்னுடன் பஸ்ஸில் வாக்குவாதப்பட்டுக் கொண்டு வரும்போது இடை இடையே இராணுவ வாகனங்கள் தென்படும்போது இந்த இருவரும் தமது முகத்தை மறைப்பதை தான் அவதானித்ததாகவும், அந்த தமிழர் பொலிஸ் அதிகாரியிடம் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின்போது அந்த இரு இளைஞர்களின் குட்டு வெளிப்பட்டது. இந்த இரு சிங்கள இளைஞர்களும் இராணுவச் சிப்பாய்கள். பூநகரி இராணுவ முகாம்மீது விடுதலைப்புலிகள் நடாத்திய ''தவளைப்பாய்ச்சல்'' தாக்குதலுக்கு முதல் நாள் லீவில் வீட்டுக்குச் சென்றவர்கள் பூநகரி முகாம் தாக்கப்பட்ட செய்தியை கேள்விப்பட்ட இவ்விருவரும் குருநாகலில் இருந்து தலைமறைவாகி கண்டிப்பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் இருக்கும் இவர்களின் உறவினர் வீட்டில் தங்கியிருப்பது தெரிய வந்தது. கண்டி பொலிஸ் அதிகாரி இச்செய்தியை கண்டியில் இராணுவ அதிகாரிக்குத் தெரிவித்தார். சில நிமிடங்களின்பின்பு இராணுவப் பொலிசார் அங்கு வந்து அந்த இரு சிங்கள இளைஞர்களையும் கைக்கு விலங்கிட்டு அழைத்துச் சென்றதுடன் அந்த மாத்தளைத் தமிழருக்கும் தமது நன்றியைத் தெரிவித்துவிட்டுச் சென்றார்களாம்.

இந்த உண்மைச் சம்பவம் கடந்த மாதம் 13-ந் திகதி நடைபெற்றது. ★

★ பிரிட்டிஷ் மியூசியத்தில் எவ்வளவு நூல்கள் இருக்கின்றன என்பதை இதுவரை கணக்கெடுக்கமுடியவில்லை. கிட்டத்தட்ட எழுபது லட்சம் நூல்கள் இருக்கலாமென கருதப்படுகின்றது. இவற்றை வைத்திருக்கும் அலுமாரிகள் ஒரேவரிசையில் வைத்துக் கொண்டுபோனால் எழுபது மைல் தூரத்துக்கு நீண்டுசெல்லும். 1921ல் இந்நூல்களை வரிசைப்படுத்தி அட்டவணைப்படுத்த ஆரம்பித்த முயற்சி இன்றுவரை நடைபெற்றுவருகின்றது. கம்பியூட்டர் ''டிஸ்கற்'' முறையில் இப்பணி நடைபெறுவதால் 2000 ஆண்டில் இப்பணி நிறைவடையும்.

– ஞானி.

புரட்சி எழுகவே

புலிகள் வேறு மக்கள் வேறெனப்
புதுமை கண்டு பிடித்தவள் செய்கின்ற
பழிகள் யாவையும் மறைத்திடத் தணிக்கையா?
பள்ளி மாணவர் உடல்கள் சிதறிடப்
பொழிந்த குண்டுகள் புலிகளைக் கொல்லவா?
பொய் உரைத்தல் நின்குடிப் பழக்கமா?
அழிவுங் கேடும் அடையுந் தமிழருன்
அடாவடிகளை அறியாரென் றெண்ணமா?

அப்பத் துண்டுக்கு வீதிகள் தோறுஞ்செல்
அவலம் எங்ஙனம் ஆனது? புலிகளின்
ஒப்புதலுடன் வந்த பொருள்களை
உடன் நிறுத்திய ராணுவ தர்பாரை
எப்படிச்சகிப் பார்மக்கள்? தமிழரை
எம்மக்கள் எனக் கூறிக் கொலைசெயும்
அற்புதமாண அகிலமே! இலங்கையை
ஆளுஞ் சிங்கள ஆட்சியைப் பாருங்கள்!

வெய்ய குண்டுகள் வீழுத்தித் தமிழர்தம்
வீடுவாசல்கள் வேலிகள் அழிப்பதும்
செய்கள் தோறும் கனரக வாகனம்
செலுத்திப் பயிர்களைக் சிதைத்து நெரிப்பதும்
பெய்யும்செல் மக்கள் உயிர்களை புலிகளிற்
பிரித்து உம்பர் வான்கொண்டு சேர்ப்பதாய்
செய்யும் சண்டை மக்களைப் புலிகள்பால்
சேர்த்தலால் ஈழப் புரட்சி எழுகவே!

''தில்லைச்சிவன்''

ஜீமுதவாகனன் தியாகம் 2

பத்மபுரம் மிகவும் செல்வம் கொளிக்கும் நாடு. அதை நீதி தழுவாமல் ஜீமுதவாகனன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் கருணை மிகுந்தவன். ஒருநாள் காட்டு வழியே நடந்துகொண்டு செல்கையில் ஒரு கிழப்பெண் நாகம் அழுதுகொண்டிருப்பதைக் கவனித்தான்; அவனுக்கு நாகங்களின் மொழிதெரியும் அதை அணுகி விஷயம் என்ன வென்று விசாரித்தான்.

''ஐயா. கருடனுக்குஎங்கள் குலத்தார் ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கின்றோம்,அதன் படி தினந்தோறும் ஒரு வாலிபநாகம் அவனுக்கு இரையாகவேண்டும். இன்று என்மகனை ''சங்கசூடன்'' இரையாகும் நாள். என் ஒரே மகனை இழந்துவிடப்போகிறேன் என்று தான் அழுகிறேன் என்றது அந்த கிழப் பெண் நாகம்,

ஜீமுதவாகனன் மனம் இளகி'' பயப்படாதே நான் உன்மகனுக்குப்பதிலாக இரையாகிறேன்'' என்றான்.

கிழநாகம் ''ஐயா வேண்டாம், வேண்டாம் என் தலை விதி அப்படி இருக்கிறதே என்று நான் புலம்புகிறேன் என்று அரசனைத் தடுத்தது, அதேசமயம் சங்கசூடனும் அங்கேவந்து விஷயத்தை அறிந்ததும் அரசனைத்தடுத்து நான் இறக்கத்தயார் எனக்காக நீங்கள் உயிரை விடுவது அடுக்காது'' என்றான்;

அப்போது வானத்தில் பெரும்சத்தம் கேட்டது சிறகுகளை அடித்துக்கொண்டு வேகமாக வந்துகொண்டிருந்தான் கருடன். வழக்கம்போல் அந்த இடத்தை நோக்கிப் பாய்ந்தபோதுஜீமுதவாகனனை கருடனின் கால் நகம் தாக்கி விட்டது. அரசனது உடலிலிருந்து ரத்தம் வழியலாயிற்று அப்போதுதான் பிழையை உனர்ந்தான் கருடன், ஜீமுதவாகனன் சிரித்த முகத்தோடு ''இதோ என்னைத்தின்று உன் பசியைத் தீர்த்துக்கொள். இந்தபாம்பை ஒன்றும்செய்யாதே''என்றான்.

கருடன் பெரிதும் மனம் வருந்தித் தன்மந்திரசக்தியால் அரசன் புண்ணை ஆற்றினான். ''அரசே என்னை மன்னியுங்கள் ஏதாவது வரம் கேளுங்கள்'' என்றான். ''இனி இந்த

ஈழமாமா

மாதிரி உயிரோடு பாம்புகளை புசிக்கவேண்டாம் முறையாக இறந்தபாம்பை புசி என்றான் ஜீமுதவாகனன்.

கருடனும் அப்படியே செய்வதாக வாக்குறுதியளித்து மறைந்தான்.

அடபோது இக்கதையைச் சொன்னவேதாளம் விக்கிரமாதித்தனை ''கருடன் ஜீமுதவாகன் இவர்களில் யார் செய்த காரியம் சிறந்தது'' என்று கேட்டான்.

ஜீமுதவாகனன் மனிதன், எல்லாவிஷயமும்தெரிந்தவன், கருடனை கிட்டியதைத் தின்னும் பறவை இனத்தைச்சேர்ந்தவன், அவனுக்கு தர்மசிந்தையேற்பட்டு வாக்குறுதியளித்ததுதான் விஷேசம் என்றான்.

[அடுத்தவாரம் காளிக்கு அளித்தவாக்கு]

சுமரத்துவம்

மாரடைப்பை தடுக்கும் மிளகு

குறுமிளகு எனப்படும் மிளகில் 'காப்சைன்' எனும் அரிய சத்துப் பொருள் உள்ளது. இது இரத்தக் குழாயில் படியும் கொழுப்புச் சத்தினை கரைத்து இரத்தக் குழாய் அடைப்பு ஏற்படாமல் காக்கின்றது.

ஐந்து மிளகை அரைத்து தேனுடன் குழைத்து தண்ணீருடன் சாப்பிடலாம். அல்லது வெற்றிலையுடன் சேர்த்து மென்றும் விழுங்கலாம்.

கொழுப்புத் திரட்சி இரத்தக்குழாயில் படிந்து அடைப்பு ஏற்படும்போது மாரடைப்பு விரைந்து ஏற்படும். இத்தகைய அபாயம் வராமல் தடுக்கும் ஆற்றல் மிளகில் இருப்பதாக அண்மையில் அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கண்டு பிடித்துள்ளார்.

நம்வீடுகளில் தினசரி நாம் பயன்படுத்தும் மிளகு ஆபத்தான மாரடைப்பில் இருந்து நம்மைக் காப்பாற்றுகின்றது. ஐந்து அல்லது பத்து மிளகை தூள் செய்து தண்ணீருடன் அல்லது தேனுடன் குழைத்து சாப்பிடுங்கள் ஆபத்தான 'கொலஸ்ரோல்' கரைந்து விடும். - ம.

திருமலை யோகேந்திரனின் 'நன்கொடை' நூல்

ஒரு அறிமுகம்

நூல் அரங்கு

தமிழ்வாசகர்களைப்புதிய பிரதேசங்களுக்குள் இட்டுச் செல்லவேண்டும் என்பதில் அக்கறைப்படும் சிலரில் திருமலை யோகேந்திரமும் ஒருவர். பிரிக்க முடியாத எமது தாயகம், எங்கள் நிலத்தில் சிங்களயானைகள், திருமலைநடராசன் கதை, அரசமரத்தின் கதை, கோணேஸ்வரம் இந்துக்களின் புனித நகராகுமா? என்று ஐந்தே ஐந்து தலைப்புக்களைத் தேர்ந்தெடுத்துக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவற்றில் சில ஏலவே சாளரம் பருவ இதழில் வெளிவந்தவை. கட்டுரைகளைத் தொகுத்து நூல்வடிவில்வெளியிடயோகேந்திரம் பிரியப்பட்டதன் காரணமாக நன்கொடை என்ற பெயரில், உங்கள் கையில் இக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

எஸ். எஸ். கதிரமலை

கட்டுரைகளைச் சேர்த்து நூலுருவில் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது வரலாற்றுத் தேடல் முயற்சி என்றுதான் சொல்லலாம். இன்னென்றும் சொல்லலாம் கட்டுரை ஒவ்வொன்றிலும் ஒரு வரலாற்றுப்பதிவு காணக் கிடைக்கிறது.

''இந்திய அரசப்படை எங்கள்தாயகத்தில் காலூன்றி இருந்த வேளையில் எமக்கு ஏற்பட்ட நிலைப் பெயர்வுகளிலே வீடுகளில் நாம் வைத்திருந்த தமிழீழப் பிரதேசங்களில் சிங்களக் குடியமர்வுகள் பற்றிய ஆவணங்களையும் முற்றுக விழுங்கின என்கிறார். ஆவணங்கள் இருப்பில் இருந்து திருப்பின்நூலை வேறுவிதமாக வெளியிடச்சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும். இந்த வகையில் நஷ்டம்தான்.

பிரிக்க முடியாத எமது தாயகம் என்ற முதலாவது கட்டுரையில் பல தரவுகளை ஆதாரமாகக் கொண்டுதமிழர் தாயகக் கோட்பாட்டை நிறுவியுள்ளார். தமிழுக்கும் தமிழர் தாயகத்துக்கும் சிதை வைக்கொடுக்கும் நடவடிக்கைகளுக்குச் சிங்கள அரசே அடிப்படை என்று தெளிவு படுத்துகிறார்.

எங்கள் நிலத்தில் சிங்களயானைகள் - மட்டக்களப்பில் நடந்த தமிழர் விரோதச் சம்பவங்களை வரிசைக் கிரமமாய் அழுத்திக் கூறுவதாய் அமைந்துள்ளது. சிங்கள அரசகருமமொழிச்சட்டம் அதே வேளை சிங்களக் குடியேற்றங்களால் மட்டக்கப்புப் பிரதேசத்தில் தமிழரின் நியதிவாழ்க்கை முறைகள் எவ்வாறு தகர்ந்தன என்பதைச்சான்றுகள் காட்டி நிரூபித்துள்ளார்.

திருமலை நடராசன் கதை இறுக்கமான போராட்ட உணர்வுகளை அடிப்படையாகக்கொண்டது. வாகனங்களில் தொங்கிய இலக்கத் தகட்டில் உள்ள சிங்கள'சிறி'க்குப் பிரதியீடாகத் தமிழ் 'சிறி'யை எழுதவேண்டும் என்ற போராட்டத்தைத் தொடர்ந்து 1957-02-04ந் திகதி துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி திருமலை நடராசன் மாண்டார்.

அரச மரத்தின் கதை-இதில் ''தென்றல் தவழும் கிளி வெட்டிக்கு'' உரிமை கொண்டாடிய சிங்களவரின் உபாயங்களைக் கூறுகின்றார்.

கோணேஸ்வரம் இந்துக்களின் புனிதநகரமாகுமா?

(7ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண மக்களின் பசிபோக்கும் மரவள்ளி

போஷாக்கு பற்றி விஞ்ஞான ஆய்வு...

நீண்டகாலமாக யாழ்ப்பாண மக்களின் பசி போக்கும் உணவுப் பண்டமாக மரவள்ளி இருந்து வருவதை யாவரும் மறந்துவிட முடியாது. இன்று இதன் உற்பத்தி குறைவடைந்திருப்பதற்கு, இப்பயிருக்கு போதிய சந்தை வாய்ப்பு இல்லாமல் இருப்பதும் மக்கள் மத்தியில் நிலவி வரும் அச்சமுமே காரணமாகும், விஞ்ஞான ரீதியாக நாம் நோக்கும் போது அவர்களது சந்தேகம் வீண் கற்பனையாகவேயுள்ளது.

இங்கேதரப்பட்டுள்ளஅட்டவணையை நோக்கும்போது எமது உடலுக்குத் தேவையான அதிகளவு சக்தியை தரக்கூடிய பஞ்சகால உணவு மரவள்ளியாகவேயுள்ளது. இதனை அரிசிக்குப் பதிலாகவும் பயன்படுத்தலாமென்பது புலனாகின்றது. எனினும் மரவள்ளியில் எமது உடலுக்குத் தீமை விளவிக்கக் கூடிய ஐதரோசயனிக் அமிலம் காணப்படுவதால், இது சமைக்காமல் பச்சையாக உண்பதுவோ அல்லது மற்றைய கிழங்குகளைப்போல் தோலுடன் சமைப்பதோ கூடாது. எனவே தான் இந்தக் கிழங்கிலுள்ள ஐதரோசயனிக் அமிலத்தை அகற்ற பின் வரும் வழிகளை எடுக்கவேண்டியது கட்டாயமானது.

அரசின் கடும் உணவு நெருக்கடிக்கு மரவள்ளிச் செய்கை வளம் தரும்

- கூடியவரை புதுக் கிழங்கை சமையலுக்குப் பயன்படுத்தல்.
- கிழங்கில் தோலை உரித்து சமைக்கும் வரை நிரம்ப நீர் விட்டு ஊறவைத்து பின் அந்த நீரை வடித்துவிடுதல்.

ஸச்சி

- மூடியைத் திறந்து வைத்து சமைத்தல்.
- சமைக்கும்போது மஞ்சள் அல்லது முருங்கை இலையை சேர்த்தல்.
- பழைய கிழங்கில் துருவிப் பால் பிழிந்து அகற்றிய பின் சமைத்தல்.
- கிழங்கினை வற்றல் போட்டு மா இடித்துப் பாவித்தல்.
- நடும்போது களி, அலரி போன்ற பால் மரங்களுக்கு அருகில் நடாதிருத்தல்.
- கிழங்கை பிடுங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் ஒன்றரை அங்குல உயரத்தில் ஒரு அங்குலத்திற்கு தோலை உரித்துவிட்டு மரத்துக்கு நன்றாக நீர் ஊற்றியபின் கிழங்கை பிடுங்கவேண்டும்.

இன்றைக்கு 37 வகையான உணவுப்பண்டங்களை தயாரிக்க மரவள்ளி உபயோகமாகின்றது. நமக்கு அது தான் பிரதானஉணவாக மாறும்காலம் தூரத்திலில்லை.

100 கிராம் அல்லது 3.5 அவுன்ஸ் மரவள்ளிக்கிழங்கு பின்வரும் போஷாக்கு தன்மைகள்

	ஈரலிப்பு கி	கலோரி கி	புரதம் கி	கொழுப்பு கி	கல்சியம் மி. கி	தயாமின் மி. கி	நைரோசன் மி. கி	உயிர்ச்சத்து மி.கி
மரவள்ளிக் கிழங்கு	59·4	157·0	0·7	0·2	50·0	50·0	100·0	25·0
மரவள்ளி மா	12·0	342·0	1·5	0·3	55·0	40.0	40·0	—
மரவள்ளி இலை	91·0	28·0	2·0	0·3	80·0	80·0	200·0	50·0

பிரிட்டனில் கார்கள் டீசலுக்கு மாறுகின்றன

பிரிட்டனில் டீசல் என்ஜின் கார்களின் விற்பனை கணிசமாக அதிகரித்து வருகின்றது. கடந்த 5 வருடங்களில் மட்டும் இவ் எண்ணிக்கை 4 மடங்காக உயர்ந்து விட்டதாக டீசல், கார் உற்பத்தியாளர்கள் மகிழ்வுடன் திருப்திகொள்கின்றனர்.

ஆம்! எல்லாம் நன்மைக்கே!

பெற்றோலால் இயங்கும் என்ஜின் போன்று இல்லாமல் டீசல் என்ஜின் காற்றை மாசுபடுத்தும். வாயுக்களான காபனோரொட்சைட் ஈரொட்சைட் போன்றவற்றை குறைவாகவே கழிவாக வெளியேற்றுகின்றது. இதேவேளை வேறு வாயு மாசுக்களான நைத்திரிக்ஒட்சைட் கந்தக வீரொசைட் என்பனவும் டீசல் எஞ்சினில் பெருமளவில் கழிவாக வெளியேறுகின்றன என்ற உண்மையையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

ஆயினும் காபனின் ஓரொட்சைட்டுக்குமே பிரிட்டிஷ் மக்கள் அதிகம் அஞ்சுகின்றனர் போலும். அதனால்தான் மேலும் பெற்றோல் கார்கள் டீசல் என்ஜினுக்கு மாற்றப்பட்டு வருகின்றன. பெற்றோலைவிட டீசல் மலிவானது என்பதும் இன்னொரு காரணமாக இருக்கலாம்.

டீசல் என்ஜினின் சிறப்பைச் குறைக்க முயலும் நைதரச கந்தக வாயுக் கழிவுகளை அகற்றுவதற்காக ஜேர்மனிய

தீபன்

விஞ்ஞானி ஒருவர் டீசல் கார்களில் ஒரு மாற்றத்தை செய்துள்ளார்.

சூரிய ஒளிப்பட்டையின் ஊதாக் கதிர்வீச்சு பூமியின் காற்றுறையின் மேற்பரப்பில் நிகழ்த்தும் மின்னியல் செயற்பாட்டை ஆராய்ந்த அவர் அதனையே டீசல் எஞ்சின் கழிவுக்குழாயினுள் பிரயோகிக்க எண்ணினார்.

(7ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

விடுதலைப் போர்

(3ம் பக்க தொடர்ச்சி)

மறந்துவிட்டார்போல் தோன்றுகிறது.

ஹர்த்தால்

அரிசிவிலை ஏற்றத்தினால் 1953ல் சிறிலங்காவில் ஹர்த்தால் நடந்தது. சந்திரிகா சிறுமியாக இருந்தபோது தெரிந்திருக்கும் பாணின் விலையைக் குறைப்பேன்என்று வாக்குறுதி கொடுதது ஆட்சிக்குவந்த சந்திரிகா அதன் விலையை முதலில் குறைததார். பின் மாவின் விலையைக்கூட்டினார். அதனால் பாணின்விலை இப்போது அதிகரிததுள்ளது. தற்போது ஒரு கிலோ மாவை பதினாலு ரூபாவுக்கு கொள்வனவு செய்து ஏழு ரூபாவிற்கு விற்பது அரசாங்கத்திற்கு நட்டம். ஆகவே மாவின் மீதான மானியத்தைக் குறைத்து மாவை ரூபா 12-50 ஆக்கப்போவதாக கூட்டுறவு மாகாண சபைகள், சுதேச வைத்திய அமைச்சர் அமரசிறி தொடங்கொட கூறியுள்ளார். வடக்கு-கிழக்கில் நடக்கும் போரை விரைவில் முடிப்பதற்காகவே இந்த விலை ஏற்றத்தைக் கொண்டுவரப் போவதாக அமைச்சர் கூறியுள்ளார். சந்திரிகாவின் அரசு சிங்கள மக்களுடன் விளையாடப் பார்க்கிறது. இது ஒரு ஆபத்தான விளையாட்டாகக் கட்டாயம் இருக்கும்.

திருமலை

(6ம் பக்க தொடர்ச்சி)

சிங்களஇராணுவம்கோணேஸ்வரத்தில் தங்கியிருப்பதை அனுமதிக்காத மனப்பான்மையை எடுத்துக்காட்டும் போக்குக் கட்டுரையின் தலைப்பில் தொங்கி நிற்கிறது. சிங்களப்படையணியை நீக்கி அவ்விடத்தை புனித நகராக்க இந்துக்களை[தமிழரை[அழைக்கிறார். மொத்தததில் இன்றைய காலகட்டததுக்கு தேவையான நூலாக அமைந்திருக்கிறது.

ஈராக் ஜனாதிபதி

(3ம் பக்க தொடர்ச்சி)

வியிலிருந்து இறக்க மேற்குலக நாடுகளும், ஏன்மத்தியகிழக்கு நாடுகளில் சிலவும் கங்கணம் கட்டி நிற்கின்றன. முன்னர் ஈராக்கின் நண்பனாய் இருந்த ஜோர்தான் மன்னரும் சதாமினின் மருமக்கள் அங்கு வந்த கையோடு அமெரிக்காவின் ஆத்ம நண்பனாகிவிட்டார். மத்திய கிழக்கிலும் மேற்குலகிலும் நண்பர்கள் குறைந்த நிலையில் சதாம் ஹுசெயின் ஒதுங்கும் நிலைக்கு வந்துவிட்டார்.

ஆனால் தந்தைக்கு முழுக்கு வந்தால் தன் குடும்பமே அழிந்துவிடும். அதனைக் காப்பாற்றவேண்டும் என்ற கருத்தோடு உதே தற்போது வேகமாகச் செயலாற்றி வருகிறார். சதாம் ஹுசெயினை யாரும் பதவியிலிருந்து இறக்கினாலோ அல்லது கொலை செய்தாலோ அவர் வாரிசான உதே ஈராக்கின் வருங்கால தலைவராக வருவதற்கான கருமங்கள் இப்போதே ஆரம்பமாகிவிட்டன.

ஈழத்தமிழரை

(4ம் பக்க தொடர்ச்சி)

வேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கையை, கோழி கூவிப் பொழுது விடிவதற்கு ஒப்பாகவே இந்தியாவும், அமெரிக்காவும் இலங்கையைப் பார்க்கும்.

இது ஒரு சுவாரசியமான சமாச்சாரம்தான். ஆனால் இந்தச் சுவாரசியம் சில செய்திகளையும் சொல்கிறது. அதாவது அந்நிய அரசுகளிடம் இலங்கை கேலிக்குரியதாகும்போதும் ஈழத் தமிழர் விவகாரத்தில் அது தனது அழுங்குப் பிடியை தொடர்ந்தும் பிடிக்க விரும்புகிறது. அதேவேளை, இது இன்னொரு செய்தியையும் சொல்கிறது. அதாவது ஈழத் தமிழர் விவகாரம் இலங்கை அரசின் வெளியுறவுக் கொள்கை வகுப்பை உலகரங்கில் மிகவும் நெருக்சுடிக்கு உள்ளாக்கி விட்டதும் என்பதே.

இந்தியாவைக் கவர இலங்கை அரசு விளம்பரம் செய்கிறது. ஆனால் அது இலங்கை அரசின் தாழ்நிலையைத்தான் விளம்பரப்படுத்துகிறது.

இவ்வாரம் எப்படி?

15-10-95 முதல் 21-10-95 வரை

மேடம்:

குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவும், அமைதியின்மையுமுண்டு மனம் கட்டுக்கடங்காது காணப்படும், தொழிலில் ஏமாற்றமுண்டு. தெய்வீக செலவினமுண்டு. பணநிலை திருப்தி தராது. பயணம் அலைச்சல் தரும். மனச்சுமையான வாரம்.

இடபம்:

குடும்பத்தில் ஏமாற்றம் நிலவினும் பாதிப்பில்லை. தொழிலில் மத்திம லாபமுண்டு, உறவினர் பிரச்னையொன்றின் மூலம் தொல்லை தருவர். பணப்புழக்கம் திருப்திதராது; காரிய தாமதம் நிலவும்; சுமாரான வாரம்.

மிதுனம்:

குடும்பத்தில் சுகமுண்டு. பிதாவழி உதவி கிட்டும். தொழிலில் கடும் உழைப்பு இருப்பினும் வருவாய் குன்றிக் காணப்படும். சுபகாரியங்களால் செலவினம் அதிகரிக்கும். நண்பர்களின் ஒத்துழைப்புண்டு; லாபந்தராத வாரம்.

கடகம்:

குடும்பத்தில் குழப்பம் நிலவினும் பிற்பகுதியில் மகிழ்ச்சியுண்டு. தொழில் துறைகளில் கருத்து வேறுபாடு ஏற்படும். உடல்நலம் பாதிக்கப்படும். சகோதர விடயத்தில் முரண்பாடு நிலவும். பணநிலை மந்தமுண்டு; குழப்பமடையும் வாரம்.

சிங்கம்:

குடும்ப விவகாரங்களில் புதிய திருப்பம் உருவாகும். அதிகாரிகள் ஆதரவுண்டு. பணநிலை பாதிப்பதற்கு இடமில்லை. புத்திரர் செலவினமுண்டு; எதிர்பார்த்த காரியம் நிறைவேறும். சிந்தனைமிக்க வாரம்.

கன்னி:

குடும்பத்தில் இனம்புரியாத அமைதியுண்டு. விரோதிகளின் செயல்கள் ஆத்திரமூட்டுவதாக இருக்கும். பணநிலை பாதிப்படைவதால் புதிய கடன்கள் ஏற்படும்; பொதுப் பணிகளில் நாட்டமிருக்கும். செலவுகள் அதிகமான வாரம்.

துலாம்:

குடும்பத்தில் சுபகாரியங்களும் கலகலப்பும் இருக்கும். பெற்றோரின் அன்பு கிட்டும். தொழிலில் சுபீட்சமும் பணப்புழக்கமும் உண்டு. உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். தெய்வீக சிந்தனைமிக்க வாரம்.

விருச்சிகம்:

குடும்பத்தில் ஏனோதானோ என்ற நிலை இருக்கும்; கருத்து மோதல்கள் கவலை தரும். தொழிலில் நஷ்டம் இருக்கும். பணநிலை போதியளவு இராது. காரிய பங்கமுண்டு. அச்சம் தரும் வாரம்.

தனுசு:

குடும்பத்தில் பிரிவும் அமைதிக்குறைவும் நிலவும். வேண்டாத தொல்லைகளில் மாட்டிக் கொள்ள வேண்டியிருக்கும். தொழிலில் பகைமை நிலவும். பாரியார் முரண்பட்டு நடப்பர். மனக்குமுறல் வாரம்.

மகரம்:

நினைத்ததை சாதிக்க முடியாமல் குடும்பத்தில் பிரச்னையுண்டு. அயலவர் சச்சரவு உருவாகும். தொழில்ஏமாற்றமுண்டு. கொடுக்கல் வாங்கல் சுமுகமாக இராது. முயற்சிகள் தாமதமாகும். யோசனை மிக்கவாரம்.

கும்பம்:

குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு. விருந்து வைபவங்களில் பங்குகொள்ள வேண்டி வரும். தொழிலில் முன்னேற்றமுண்டு. பணப்புழக்கம் சிறப்பாகவுள்ளது. புதிய முதலீடுகள் லாபம் தரும். வெளியூர் செய்தி திருப்தி தரும். அதிர்ஷ்ட வாரம்

மீனம்

குடும்பத்தில் சங்கடங்களுண்டு. நினைத்ததை நிறைவேற்ற முடியாமல் போகும். நல்லவர்களை பகைத்துக் கொள்வீர்கள்; பணமுடையுண்டு. பொருள் இழப்பு உண்டு. தவறான செயல் கவலை தரும். குளம்பிய நிலையில் காணப்படும் வாரம்.

கணிப்பு: ஜோஸ்யர்

மாதாந்த உதவிப்பணம்

(அரியாலை)

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட வறுமைக் கோட்டில் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் ஆவணி மாத உதவிப் பணம் இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடன் வந்து எடுக்குமாறு ஊர்காவற்துறை தபால் அதிபர் கேட்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது. 59

பிரிட்டனில்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இக்குழாயினுள் இரு மின் வாய்களை இணைந்து அவற்றிடையே மின் அழுத்த வேறுபாட்டை உண்டாக்கினார். இதன்மூலம் அதிக அளவில் மின் தீப்பொறிகளை ஏற்படுத்தி நைதரச கந்தக ஒட்சைட்டுக்களினின்றும் ஒட்சிசனை வேறாக்கினார். போதிய மின்சக்தியைக் கொடுத்து 95 வீதமான நைத்திரிக்ஒட்சைட் இதன்மூலம் அகற்றப்படுகின்றது என்பதை அவர் நிரூபித்துக் காட்டியுள்ளார்.

மீனவர் மீது துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்பகுதியில் நேற்று காலை 6 மணியளவில் மீன்பிடி தொழிலில்ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி மண்டைதீவு படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்; தெய்வாதீனமாக மீனவர்கள் காயமெதுவுமின்றி தப்பி கரைவந்து சேர்ந்தனர். 170-ரி

பொதுமக்களுக்கோர் அறிவிப்பு

துரித சந்தைப்படுத்தல் சேவையால் விநியோகிக்கப்படும் சாதாரண உப்பின் ஆகக்கூடிய புதிய சில்லறை விலை கிலோவுக்கு ரூ. 12.00 ஆகும்.

கழுவிய உப்பின் ஆகக்கூடிய புதிய சில்லறை விலை கிலோவுக்கு ரூ. 18.00 ஆகும்

றோஸ் பிராண்ட் ரொபி விலைகளில் விலை மாற்றம் இல்லை

ரொபிகளின் வகை	ஒரு ரொபியின் ஆகக்கூடிய சில்லறை விலை
1. புறுட்டீஸ்	02.00
2. சொக்கிலேற்மின்ற்	02.00
3. மோல்டீஸ்	01.50
4. செஸ்ரோ	01.50
5. கொபி கிறஞ்	01.50
6. கொபி ட்றொப்ஸ்	01.50
7. ஏனையவை	01.00

மொத்த விற்பனையாளர்கள் எமது முகவர்களுடன் தொடர்பு கொள்ளவும்

இவற்றையோ அதிக விலையில் விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை எடுக்கக்கூடியதாக அவர்களது விபரங்களை எமக்கு அறியத்தாருங்கள்

துரித சந்தைப்படுத்தல் சேவை.
61, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

துரித சந்தைப்படுத்தல்சேவை,
கைத்தொழில் பகுதி,
த.பொ.மே. நிறுவனம், தாவடி

தட்டை ஓடு, முகட்டோடு, செங்கற்கள்இவைகளில் உங்கள் தேவை எதுவாக இருந்தாலும் பூர்த்தி செய்ய நாம் காத்திருக்கின்றோம்

(ஏ-5391

வாகன சுத்திகரிப்பு

1995-09-01ந் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட "யாழ் ஊர்திகள் நிலையம்" யாழ் மக்களின் எல்லா வகையான வாகனங்களையும் வாகனச் சொந்தக்காரர்களின் நன்மை கருதிக் குறைந்த கட்டணங்களில் சுத்திகரிப்பு செய்ய ஆரம்பித்து உள்ளது. வாகன சுத்திகரிப்பு மட்டுமன்றி வாகன, மிதிவண்டி ரியூப் ஒட்டுதல், வால்க்கணேஸ், பொலிசிங் வேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;

யாழ் ஊர்திகள் நிலையம்
இல 50, இளங்கோ வீதி (மணிக்கூட்டு வீதி)
யாழ்ப்பாணம்.

(எ-5390)

யாழ். உணவுப்பிரச்னை குறித்து சந்திரிகா தலைமையில் மாநாடு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் தேவையை ஆராய்ந்து அவற்றை அனுப்பும் வழி வகைகளைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் மாநாடு ஒன்றை நடாத்தவுள்ளார்.

யாழ்: அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம், புனர் வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜனாப்சரீப் மற்றும் யாழ்ப்பாண செயலக அதிகாரிகள் உட்பட பலர் யாழ் மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களின் பிரச்னை, மருந்துப்பற்றாக்குறை, உணவுப்பற்றாக்குறை போன்ற, பல விடயங்களை கொழும்பில் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் எடுத்துக்கூறினர்.

இதனையடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரச உயர் அதிகாரிகள் கொண்ட மாநாடு ஒன்றை கூட்டவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா வைச்சந்தித்து யாழ். மாவட்ட உணவு நிலை குறித்து உரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது. ர-ரி

அநுராதபுரத்தில்

குடும்பநலசேவையாளர் பரீட்சை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

குடும்பநல சேவையாளர் தரம் 2 ஆ பிரிவுவின் திறமை காண் செயல்முறை பரீட்சை-1994 எதிர்வரும்18-ம் 19ம்-திகதிகளில் அனுராதபுர சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவு அலுவலகத்தில் காலை 8.30ற்கு நடைபெறவுள்ளது;

இவ்வுத்தியோகத்தர்களை தமது தேசிய அடையாள அட்டையுடனும் அவர்களது கையெழுத்தை உறுதி செய்து நிறுவனத் தலைவரால் அல்லது தம்மால் வழங்கப்பட்ட கடிதத்துடன் சமுகமளிக்க அறிவிக்குமாறும் யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் வை. சிறிகாந்தா அறிவித்துள்ளார்.

பிரவேச அட்டைகள் கிடையாவிடினும் தேசிய அடையாள அட்டையையும், நிறுவனத் தலைவரின் கடிதத்துடன் இவ்வுத்தியோகத்தர்கள் அனுராதபுரத்திற்கு செல்வது விரும்பத்தக்கது எனவும் அவர் தெரிவித்துள்ளார்

குடும்பநல சேவை உத்தியோகத்தரின் பெயர் விபரங்கள் வருமாறு:-

எ. திருச்செல்வம். பி. திரேசம்மா, எம். ஆரோக்கிய நாதன் கே. இராஜேஸ்வரி, வி. கந்தசாமி, பி. பழனி, பி. காமலமோகனா. (யாழ். போதனா வைத்தியசாலை) வி. வீனஸ் அலுவலகம்குறிப்பிடப்படவில்லை), ஆர். நிதிதிசந்திரராஜா, ஜே. உதயமாலன், எம். சரோஜா. உ. உதயகாந்தன், எஸ். பத்மநாதன் (சு. வை. அ. அ. கோப்பாய்) கே. குழந்தைவடிவேல் (ம.ம. மா. வி. வரணி), பி. ஜெயந்தி கே புஷ்பமலர், கே. செல்வரத்தினா (ச. வை. அ. அ. சாவகச்சேரி), எஸ். இரத்தினராஜா, எஸ். வேலாயுதன் (சு. வை. அ. அ. பருத்தித்துறை), எம். ஏசுவானி வி. பாலசுப்பிரமணியம், எம். தேவன், எஸ். செல்வராஜா, பி. மகாலிங்கம், எஸ். பாலசிங்கம் [சு. வை, அ. அ இணுவில்], ஆர். கந்தசாமி [கி. வை வட்டுக்கோட்டை] கே. சிவலிங்கம் [ம. ம. வ வி. கோண்டாவில்], கே. கோமலாதேவி [ம ம ம மா வி குருநகர்[. பி. சோமசுந்தரம் [சு கூ அச்சுவேலி], ஆர் கனகபாலி [மா வை சாவகச்சேரி]

மேற்குறிப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிர்வரும் 18ம் திகதி 8-30 மணிக்கு பரீட்சை நடைபெறும்.

எஸ். சுந்தரமூர்த்தி எம். அருளானந்தம் [மா வை சாவகச்சேரி] வி. இராசரத்தினமலர் [ஆ வை பருத்தித்துறை] எம். சிவமணி, எஸ். ஜெயலட்சமி, பி. யோகேஸ்வரி (அ. வை. பருத்தித்துறை] [சு வை அ அ கிளிநொச்சி] எஸ். ஜெயசீலன். எஸ். ரோகினிதேவி எம். அந்தோனி பி. தங்கநாயகி, என். சிவனேஸ்வரி, வை தர்மலிங்கம், என். தவகுலம், பி. துரைசாமி [சு. வை அ. அ. மானிப்பாய்[, எம். மாசிலாமணி [சு. கூ. சங்கானை] கே. செல்லம்மா [சு. வை. அ. அ. மானிப்பாய்] கே, இரஞ்சிதமலர். பி. வேலுப்பிள்ளை. சீ. யேசுமலர், வை. சிவானந்தராஜா. பி செல்லப்பா, பி தர்மலிங்கம் என், புவனேஸ்வரி [சு. வை. அ. அ. சாவகச்சேரி] டி. ஜேசுதாசன், வி. கமலவோணி, பி. தர்மரத்தினம் (சு கூ. கோப்பாய்), பி. பத்மநாதன், பி செல்லத்துரை, சுந்தரரேஸ்வரி, எஸ். தர்மபிள்ளை (சு. வை. அ. அ. சாவகச்சேரி).

இவர்களுக்கான பரீட்சை அனுராதபுர சுகாதார சேவைகள் பிரிவு செயலர் அலுவலகத்தில் எதிர்வரும்19 ஆம் திகதி காலை 8-30 மணிக்கு நடைபெறும். 170-ரி

ஒரு துப்பாக்கி ரவை கூட பாவிக்காத நிலையிலும்

நாட்டின் பாதுகாப்புக்காக மாதம் ஒருகோடி ரூபா செலவு

(கொழும்பு)

யுத்தத்துக்காக ஒரு துப்பாக்கி ரவை பாவிக்காத நிலையில் கூட நாட்டின் பாதுகாப்புச் செலவாகின்றது என ஜனாதிபதியின் செயலாளர் பாலத்த பெண்டி கூறியுள்ளார்.

வடக்கு, குழக்கு யுத்தத்திற்கு எதிராக ஒரு துப்பாக்கிரவை கூட பாவிக்காவிட்டாலும் மாதம் ஒரு கோடி ரூபா பாதுகாப்புச் செலவு ஏற்படுகின்றது;

இப்பணம் படையினருக்காகவும் ஏனைய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் செலவழிக்கப்படுகின்றது தவிர்க்க முடியாத செலவாக உள்ளது எனவும் திரு. பாலபெத்த பெண்டி மேலும் தெரிவித்துள்ளார்; ரி-ரி

பாதுகாப்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நீராவியடி ஜே/101, கலட்டி ஜே/100 கிராம சேவகர் பிரிவுகளில் வாழுகின்ற தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதலளித்து இன்றுவரை நிதியினை வழங்காத மக்கள் அனைவரும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணி தொடக்கம் 12 30 மணிவரை யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில் அமைந்துள்ள தொடர்பகத்தில் நிதியினை வழங்குமாறு பாதுகாப்பு நிதி தொடர்பகத்தினர் அறிவித்துள்ளனர்,

அரியாலை ஜே/91, ஜே/92. ஜே/93 கிராம சேவகர் பிரிவுகளில் வாழ்கின்ற தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதலளித்து இன்றுவரை நிதியினை வழங்காத மக்கள் அனைவரும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணி தொடக்கம் 5 30 மணி வரை யாழ்: கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் (ஸ்ரான்லி கல்லூரி) அமைந்துள்ள தொடர்பகத்தில் நிதியினை வழங்குமாறு பாதுகாப்பு நிதி தொடர்பகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். -கி-ரி

மாணவர் பக்கம்

ஒவ்வொரு புதன்கிழமையும் சனிக்கிழமையும் ஈழநாடு' தினப்பதிப்பில் மாணவர் பக்கம் வெளிவருகின்றது. 5ம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வினாவிடைகள்புதன்கிழமையும். க பொ த உயர் தர சாதாரண மாணவர்களுக்கான வினாவிடைகள் சனிக்கிழமையும் வெளியாகின்றன பயன்பெறுங்கள்.

ஆ—ர்

ஆசிரியர் மாணவருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி நாளை 16ம் திகதி திங்கள் கிழமை தொடக்கம் வழமைபோல் நடைபெறவுள்ளது. ஆகிரியர்களும், மாணவர்களும் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ரி

பாதுகாப்புநிதி

(யாழ்ப்பாணம்)

தேசிய பாதுகாப்புநிதி கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்டவர்கள் இம்மாதம் 21ம் திகதி சனிக்கிழமை கோப்பாய் தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பகத்தில் நிதியினை செலுத்தி ஒத்துழைப்பு நல்குமாறு கேட்கப்படுகின்றனர். ரி

டக்ளஸின் பாதுகாப்புக்கு அரசு பொறுப்பில்லை

(கொழும்பு)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தவுக்கு பாதுகாப்பு வழங்கும் பொறுப்பு அரசுக்கு இல்லை என்று பொலிஸ் மா அதிமர் டி. பி. கொட்டகதெனியா தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் டக்ளஸ்தேவானந்தவுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு இல்லாத போதும் அரசு அவருக்கு பூரண பாதுகாப்பு வழங்கியிருந்தது;

ஆனால் எதிர்க்கட்சித் தலைவர்கள் அரசின்மீது வீண் பழிசுமத்தும் பொருட்டு வுரசு டக்ளஸ் தேவானந்தபக்கு சரியான முறையில் பாதுகாப்பு வழங்க தவறிவிட்டது எனக் குற்றம்சாட்டியுள்ளனர் என்றும் தெரிவித்தார். ர-ரி

கொழும்பிற்கு

[1ம் பக்க தொடர்ச்சி]

மாற்றம் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினரிடையே பேரதிர்ச்சியை கொடுத்துள்ளது.

தற்போது யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை பிரிவில் டாக்டர் கணேசரத்தினம் மட்டுமே சத்திரசிகிச்சை நிபுணராக கடமையாற்றிவருவது குறிப்பிடத்தக்கது. இவர் இடமாற்றப்பட்டு கொழும்பு சென்றால் யாழ். வைத்தியசாலை சத்திரசிகிச்சை பிரிவு ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்படும்;

இதேவேளை சந்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எம். கணேசரத்தினத்தின் இடமாற்ற உத்தரவை இரத்துச் செய்யுமாறு கொழும்பு சென்றிருக்கும் யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி கே. நவமலர் தலைமையிலான குழு சுகாதார அமைச்சை கேட்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு இவ் இடமாற்ற உத்தரவை உடனடியாக விலக்கி கொள்ளுமாறும் பணிப்பாளர் சுகாதார அமைச்சை கேட்டுள்ளார் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 170-ரி

இனப்பிரச்னைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டில் அதிகாரப் பரவலாக்கல் அவசியமானது. அதிகார பரவலாக்கல் சரியான முறையில் இல்லாமையிலேயே இவ்வளவு பிரச்னைகளும் தோன்றியுள்ளன. அதிகார பரவலாக்கல் செய்வதன் மூலம் இன்றைய பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளலாம்.

விடுதலைப் புலிகள் விரும்பாவிட்டாலும் தற்போது அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் பெருமளவிலான மக்களின் ஆதரவை பெற்று அமுலுக்கு வரும். இதன் மூலம் பிளவுபட்ட நாட்டை ஐக்கியப்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். -ர-ரி

புலிகள்

(1ம் பக்க தொடர்ச்சி)

புலிகளை இராணுவ ரீதியில் யலவீனமடையச் செய்வதே எமது நோக்கம்;

எமது நிபந்தனைக்குட்பட்டு விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு இணங்கினாலே ஒழிய அதுவரை யுத்தம்தொடர்ந்து நடாத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். -ர-ரி

பேச்சுக்கள்மூலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான கட்டத்தை அடைந்துள்ளதாகவும் இம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. செயலாளர் நாயகம் திரு. பூற்றஸ் பூற்றஸ் காலிக்கு அனுப்பப்பட்டிருக்கும் இம்மகஜரில் யாழ். குடாநாடு மீது மேற்கொள்ளப்பட்ட போர் நடவடிக்கைகளால் ஏற்பட்ட உயிரழிவு, பொருளழிவு போன்ற விபரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன;

யாழ். பிரஜைகள் குழு தலைவரும். யாழ். பல்கலைக்கழக உபவேந்தருமான பேராசியஜக. குணரத்தினமும் பிரஜைகள் செயலாளர் திரு. ஆர். மகேந்திரனும் இம் மகஜரில் கைச்சாத்திட்டுள்ளனர்

யாழ் பிரஜைகள் குழு சமீப காலத்தில்ஜனாதிபதிக்கு யாழ். நிலைமை பற்றி நான்கு கடிதங்கள் சவர்பித்துள்ளது என்றும் ஆனால் இதுவரை பதில் கடிதம் கிடைக்கவில்லை என்றும் இம்மகஜரில் சுட்டிக்கப்பட்டப்பட்டுள்ளது;

சிறிலங்காவின் பாதுகாப்பு படையினர் குடிமக்கள் வதியும் பகுதிகள் மீது தொடர்ச்சியாக கண் மூடித்தனமான எறிகணை வீச்சை நடத்தி வருவதால் பெரும் தொகையான மக்கள் கொல்லப்பட்டும் ஏராளமானோர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் புள்ளி விபரங்களுடன் இம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்தோடு அத்தியாவசிய பொருள் உணவு, எரி பொருள், உரவகை, மருந்து வகை ஆகியன யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கு அரசு தடைகளை விதித்திருப்பதாகவும் யாழ். பிரஜைகள் குழு குற்றம் சாட்டியுள்ளது;

தமிழரின் தேசிய பிரச்னை அரசியல் பேச்சுக்கள் மூலமே தீர்த்து வைக்கப்படவேண்டும் ராணுவ தாக்குதல் மூலம் இப்பிரச்னைக்கு தீர்வு காண முடியாது என்பதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். ஆயினும் அரசு போர் நடவடிக்கைகளை தொடர்கிறது. இவை தமிழ் மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாத நடவடிக்கைகள் என்றுதான் வர்ணிக்க முடியும் இந்த மக்கள் விரோத நடவடிக்கைகள் மக்களின் போராட்ட உறுதிப்பாட்டை மேலும் பலப்படுத்த மட்டுமே உதவிபுரியும் தமிழரின் இனப் பிரச்னையின் வரலாறும் இந்த உண்மையையே எடுத்துக் காட்டுகிறது;

அரசு போர் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி விரியுபடுத்துமாயின் ஒற்றையாட்சியின் கீழ் தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண்பது முடியாத காரியமாகிவிடும் என்றும் பிரஜைகள்குழு அந்த மகஜரில் தெரிவித்துள்ளது; தீ-ரி

தட்டவிரோத

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரி 56 மகசீன்கள், மூன்று எவ் 84 மகசீன்கள், நான்கு ஜொனி வெடிகள், 370 துப்பாக்கி ரவைகள், 250 கிராம் வெடிமருந்து மேலும் பல எறி குண்டுகள் போன்றவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்

நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் கிடைத்த இரகசிய தகவால் அடுத்து இந்த திடீர் சோதனை பொலிஸாரால் மேற்கொள்ளப் பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618